# திறவுகோல்

ஆடி
2048

மாத இதழ்



ஒத்திகைக்களமா
கதிராமங்கலம்?
- இராசசேகரன்

உள்ளூரில் தொழில்
செய்வதில் இவ்வளவு
சிரமம் உள்ளதா?
அமுதன்
நிறுவனர் - Bestech Computers

நம்மூர் பள்ளி
மணிமேகலை
நடுநிலைப் பள்ளி
பற்றி அறிவோம்

கல்வித் துறையும் தனித்த அதிகாரம்
உள்ள அமைப்பாக உருவாக வேண்டும்
- ஆசிரியர் ச.அன்பரசு

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஒத்திகைக்களமா கதிராமங்கலம்?


இராசசேகரன் மன்னை

கம்பர் வளர்ந்த ஊர், கம்பரை வளர்த்த சடையப்ப வள்ளல் பிறந்து வளர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்த ஊர், அம்பிகாபதி அமராவதியின் காதல் கனிந்த ஊர், கோவலனும் கண்ணகியும் பூம்புகார் நோக்கி கடந்து சென்ற ஊர்...

குலோத்துங்கனின் மகனான விக்ரமன் காவிரியை வடக்கு நோக்கி பாயச்செய்த ஒரே பண்பட்ட ஊர்...

ஒரு பக்கம்
விக்ரமன் ஆறு
மறுபக்கம் காவிரி ஆறு
நடுவே நடுவெளியாக உள்ள ஊர்
இன்று நருவெளி என திரிந்த ஊர்...

இதனாலேயே விக்ரம ஆறு, வடகாவிரி என்று பாடல் பெற்ற ஊர்...

யானைக்கட்டி போரடித்த சோழமண்டலத்தில் களம் கொள்ள கதிர்களை கொண்டதால் கதிர்வேய்ந்தமங்கலம் என அறியப்பட்ட ஊர்.

அக்காலம் முதல் இக்காலம் வரை பசுமை போர்த்திய பரந்த நிலப்பரப்பை கொண்ட ஊர் இன்று ONGC அரக்கனால் பாலைவனமாவதை தடுக்க அறப்போராட்டம் நடத்தும் அற்புத ஊர்.

காவிரிப்படுகையில் பல ஆண்டுகளாக ONGCயால் எண்ணெய் எடுக்கிறோம் என்று சொல்லி பாழ்படுத்தப்பட்ட பல பகுதிகளில் கதிராமங்கலமும் ஒன்று. இதனாலேயே இப்பகுதியின் நிலத்தடி நீர் உப்பாகி பயன்பாடற்று போனது, தண்ணீரின் தன்மையும் கெட்டுப்போனது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து உழவு செய்ய வழியற்ற நிலமாக மாறி வருகிறது.

ONGC கோபுரத்திலிருந்து வெளியேற்றப்படும் எரிவாயுக்களால் செயற்கையான மழை மறைவு பிரதேசமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது கதிராமங்கலம்.

மேலும் எண்ணெய் எரிவாயு துரப்பண பணியானது மக்கள் குடியிருப்பு பகுதியில் இருக்க கூடாது என்ற விதி இருந்தாலும் ஊரின் மையப்பகுதியில் கடைகள் வீடுகள் உள்ள மக்கள் புழக்கம் அதிகம் உள்ள பகுதியிலேயே பணி நடந்து கொண்டிருக்கிறது.



கதிராமங்கலத்தின் நிலத்தடி நீரின் இன்றைய நிலை

ஊரில் வயல்கள், வாய்க்கால்கள், ஆறுகளின் குறுக்கே என்று எங்குமே எரிவெளி சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்ல எரிவாயு குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் பல முறை விபத்து ஏற்பட்டு தீயணைப்பு வாகனங்களால் தீயை அணைக்க முடியாமல் துரப்பன பணி நடக்கும் இடத்தில் வாயு வரும் வழியை ONGC ஊழியர்கள் வந்து அடைத்து பாதிப்பு ஏற்பட்ட குழாயை சரி செய்த பிறகே தீயை அணைக்க முடிகிறது.

இதே போன்று முன்னொரு முறை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி மூதாட்டி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார் இதனாலேயே அம்மக்கள் எந்த நேரத்தில் என்ன ஆபத்து வருமோ என்ற அச்சத்திலேயே வாழ்க்கையை கழிக்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில் தான் ONGC நிறுவனம் பராமரிப்பு வேலை என்று கூறி கனரக வாகனங்கள் எந்திரங்கள் என கூடியதால் மக்கள் அச்சமுற்று தங்களின் எதிர்ப்பையும் ONGC வேலையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்...

மே 19 அன்று வட்டாச்சியர் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையில், ONGC நிறுவனம் வேலையை உடனே நிறுத்த வேண்டும் என்றும் மேலும் தரையில் செல்கின்ற எரிவெளிக் குழாய்களை அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் முன் வைத்தனர்.

அதற்கு ONGC நிறுவனம் இனி வேலையை தொடங்கமாட்டோம் என்றும் குழாய்கள் நான்கு அடி ஆழத்தில் தான் செல்கிறது அதனால் பாதிப்பு இல்லை என்றும் கூறினார்கள்.

ஆனால் குழாய்கள் தரையில் குடியிருப்பு பகுதியில் செல்வதை ஊரின் இளைஞர்கள் காணொலியாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் பரவவிட அதிர்ச்சியான ONGC நிர்வாகம் உடனே அக்குழாய்களை அப்புறப்படுத்தி சாட்சிகளை அழிக்கும் வேலையை தொடங்கியது, அதையும் கதிரை இளைஞர்கள் காணொலியாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் பதிவு செய்தனர்.

இந்த நிலையில் துணை மாவட்ட ஆட்சியர் இனி இங்கே ONGC நிர்வாகம் எந்த பணியும் செய்யாது சென்று உறுதி கூற மக்கள் சற்று அயர்ந்தனர்.

அந்த சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி சூன் 2ம் திகதி ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் 4 துணைக் கண்காணிப்பாளர்கள், 9 ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் வட்டாச்சியர், கிராம நிர்வாக அலுவலர்கள் இணைந்து ஊரில் முகாமிட்டு இரண்டு வீட்டிற்கு ஒரு காவலர் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களை ஊரில் அமர்த்தி மக்கள் எங்கும் நடமாட முடியாத வகையில் கட்டுக்குள் கொண்டு வந்து

அடக்குமுறையை ஏவ முயற்சி செய்தனர்...
இச்செய்தியை கேள்விப்பட்டு கதிராமங்கலத்திற்கு மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் செயராமன் மற்றும் கூட்டமைப்பினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். மக்களின் நியாயத்தை அவர்களின் அச்சத்தைப் போக்க அதிகாரிகளிடம் பேச வந்தவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

நிலைமையை உணர்ந்த கதிராமங்கலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் கரிகாலன், ஊர் மக்கள் ஆயிரம் பேரை திரட்டி போராட முனைந்த போது அவர்களும் கைது செய்யப்பட்டனர் எல்லாம் மூன்று மணி நேரத்தில் நடந்து ஊரே அமைதியாகி ONGC வேலையை தொடங்க ஏதுவான நிலையை காவல்துறையினர் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

பெண்கள் குழந்தைகள் வயதானவர்கள் என்று அனைவரையும் மண்டபத்தில் அடைத்து சரியான உணவு கூட கொடுக்காமல் இரவு ஒன்பது வரை வைத்திருந்து விடுதலை செய்தனர்.

பேராசிரியர் செயராமன், வழக்கறிஞர் கரிகலான் உள்ளிட்ட கூட்டமைப்பினர் பத்து பேரின் மீது பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து குடந்தை கிளைச் சிறையில் அடைத்தனர்.

இதனால் பெருங்கோபம் கொண்ட மக்கள் சூன் 3 ம் திகதி ஊரில் உள்ள 93 கடைகளையும் அடைத்தும் சூன் 4ம் திகதி அனைத்து வீடுகளிலும் கருப்பு கொடியேற்றியும் போராட்டத்தை முன்னெடுத்தனர் ஆனால் காவல்துறையும் அடக்குமுறையை குறைக்கவில்லை ONGCயும் வேலையை நிறுத்தவில்லை.

அதே நேரத்தில் வெளியில் நடமாடும் ஆண்களை அச்சுறுத்துவது, இளைஞர்களை மிரட்டுவது பெண்களின் முந்தானையை இழுத்து அசிங்கப்படுத்தியது மாற்றுத்திறனாளி ஒருவரை தாக்கி வாகனத்தில் ஏற்ற ஊர் கூடி எதிர்த்ததால் அவரை விட்டனர் அவர் மருத்துவமனையில் சிகிச்சை மேற்க்கொள்கிறார். இப்படி அட்டூழியங்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

இவ்வளவு அடக்குமுறையில் சிக்கி இருக்கும் மக்களை பார்த்து ஆறுதல் கூற சென்ற காவிரி உரிமை மீட்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் பெ.மணியரசன், திருவாரூர் மாவட்ட பொறுப்பாளர் மருத்துவர் பாரதிசெல்வன், அயனாபுரம் முருகேசன், திருவாரூர் கலைச்செல்வம், குடந்தை விடுதலை சுடர், மற்றும் காவிரி உரிமை மீட்பு குழு தோழர்கள் கும்பகோணத்தை அடுத்த கருப்பூரிலேயே தடுத்து கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர் அந்த மூன்று நாட்களும் கதிராமங்கலம் செல்லும் அனைத்து பாதைகளும் துண்டிக்கப்பட்டு வெளித்தொடர்பற்ற தீவாக மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனால் சூன் 5ம் திகதி ஊரை விட்டு காவல்துறையும் ONGC நிர்வாகம் வெளியேற வேண்டும் என்று கூறி மக்கள் ஊரிலிருந்து வெளியேறி முள்ளுகுடியில் கூடி போராடத் தொடங்கினர்.

சூன் 7 ம் திகதி பேராசிரியர் செயராமன் உள்ளிட்ட தோழர்களுக்கு வழக்கறிஞர்கள் தஞ்சை நல்லதுரை, கதிரை கார்த்திகேயன் மற்றும் 25 க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் குழுவின் கடுமையான வாதத்தில் நிபந்தனையுடன் கூடிய பிணையில் வெளியே வந்தனர்.

அதற்குள் ONGC நிறுவனம் தனது பணிகளை முடித்த காரணத்தால் காவல்துறையினர் திரும்ப பெறப்பட்டனர் இருந்தும் துரப்பணபணி நடக்கும் இடம் மற்றும் ஊரின் முக்கிய பகுதிகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட காவலர்கள் பணியில் இருக்கின்றனர் இந்த நொடி வரை கதிராமங்கலம் அவர்கள் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இளைஞர்கள் மக்கள் கூடி பேச முடியாத அளவிற்கு அச்சுறுத்தப்படுகின்றனர்.

## முகநூல் முழக்கம்

வெட்டாதீர்கள்
மழை தருவேன் என்கிறது
மரம்

வெட்டுங்கள்
மழை நீரை சேமிப்பேன் என்கிறது
குளம்

**- மன்னை விக்னேசு**

இந்த மாதிரியான அடக்குமுறை இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 19ன் கீழ் மக்களுக்கு வழங்கும் அடிப்படை உரிமைகளான பேச்சுரிமை எழுத்துரிமை சுமூகமாக வாழ்கின்ற உரிமை என அனைத்தையும் மறுக்கும் செயலாகும்.

இது கதிராமங்கலத்திற்கு மட்டுமான பிரச்சனையன்று! காவிரிப்படுகை எங்கும் ONGC நிறுவனம் மீத்தேனோ, ஷெல் எரிவாயோ, ஹைட்ரோ கார்பனோ எடுக்க நினைக்கும் அனைத்து பகுதிகளுக்கும் நாளை இதே நிலை தான்.

அதுவும் இவர்களின் அடக்குமுறையில் ஒரு காதணி விழா நிறுத்தப்பட்டுள்ளது, திருமணத்திற்கு மணப்பெண்ணை அழைத்து செல்ல அனுமதிக்காமல் தடுக்க மாப்பிள்ளை வீட்டார் தங்களின் குடியுரியமை ஆவணங்களை காட்டி பெண்ணை அழைத்து சென்றுள்ளனர் இது அவர்களுக்கு எவ்வளவு மனவேதனையை ஏற்படுத்தி இருக்கும்?

இது போன்ற செயல்களே மக்களை உணர்ச்சிக்குள்ளாக்கி அறப்போராட்டத்தின் போக்கையே மாற்றம் பெற செய்கிறது. இதில் மக்களுக்கு சரியான வழி காட்டுதல் இல்லையெனில் வன்முறையாக மாறி அறப்போராட்டக்களம் முழுமையாக அதிகாரத்தின் கட்டுப்பாட்டிற்கு சென்றிருக்கும்.

தற்போது கூட சட்டமன்றம் கூடியுள்ள நிலையில் ஆளுங்கட்சியானது ஐயா. நம்மாழ்வரின் போராட்டத்தால் மறைந்த முதல்வர் செயலலிதா அமைத்த வல்லுனர் குழுவின் பெயரில் மீத்தேன் திட்டம் மக்களுக்கு ஆபத்தானது. அதை தமிழகத்தில் செயல்படுத்த கூடாது என்று வெளியிட்ட அரசாணையை குப்பைத்தொட்டியில் வீசிவிட்டு இந்திய ஒன்றியத்திற்கும் ONGC க்கும் சேவகம் செய்கிறது. எதிர்கட்சி இப்பிரச்சனை என்னவென்றே தெரியாததை போல நடிக்கிறது. மொத்தத்தில் கதிராமங்கல மக்கள் அரசியல் அனாதைகளாக உள்ளனர்.

ஆட்சியாளர்கள் உதவவில்லை, அதிகாரிகளின் ஆதரவுமில்லை! யார் தான் இவர்களை காப்பது நாம் தான் காக்க வேண்டும், நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டும். கதிராமங்கலத்தை தனித் தீவாக்கியவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்து நாம் நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.

ONGC க்கு எதிராக தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு காவிரிப்படுகையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வலியுறுத்தி தைப்புரட்சியை போன்று மண்மீட்பு புரட்சிக்கு வித்திடவில்லையென்றால் ஆறு மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் அழியும், 19 மாவட்ட மக்களின் குடிநீராதாரம் சிதையும்.

இது கதிராமங்கலத்திற்கான பிரச்சனை மட்டுமல்ல தமிழர்நாட்டிற்கான பிரச்சனை தமிழர் வாழ்விடத்திற்கான பிரச்சனை தமிழர் குடிநீருக்கான பிரச்சனை.

மனிதர்கள் குடிநீரை புட்டியில் வாங்கி குடிக்கலாம் ஆடு மாடுகள் எந்த கடையில் தண்ணீர் வாங்கி குடிக்கும்? மேலும் வாழுமிடம் சிதைந்து போனால் சந்ததிகள் எங்கே வாழ்வார்கள்?

பிள்ளைகளுக்கு நல்ல படிப்பை தர நினைக்கிறோம், நல்ல துணி கொடுக்க நினைக்கிறோம், நல்ல உணவு கொடுக்க நினைக்கிறோம். நமது வருமானம் எதிர்காலம் அனைத்தையும் அவர்களை மையப்படுத்தியே கட்டமைக்கிறோம்.

ஆனால் அவர்கள் வாழ பாதுகாப்பான நிலம் வேண்டாமா? தூய்மையான காற்று வேண்டாமா! தூய்மையான குடிநீர் வேண்டாமா? வெறும் பணத்தையும் சொத்தையும் வைத்துக்கொண்டு வாழ்ந்து விட முடியுமா?

நமது முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக நமக்கு பாதுகாத்து கொடுத்த நிலத்தை நமது சந்ததிகளுக்கு பாதுகாப்பாக கொடுக்க வேண்டியது நமது கடமையில்லையா? நமக்காக நாம் போராடாவிட்டால் வேறு யார் வருவார்கள் நமக்காக போராட...

ஆகவே சந்ததிகள் வாழ வேண்டுமென்றால் இன்றே இணைய வேண்டும் இனம் காக்க போராட வேண்டும் மண் மீட்க களம் காண வேண்டும்.

**இராசசேகரன் மன்னை**
மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பு

> “ நம்முடைய நலனுக்காக என்றைக்கு சமரசம் ஆகிறோமோ... அப்போது தான் தீமையின் திசையில் நாம் கால் வைக்கத் தொடங்குகிறோம்... ”
>
> -இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்

## சுமை

சிந்திக்காத வரை 'மூளை'
தலைக்கு சுமை

செயல்படாத வரை 'உறுப்புகள்'
உடலுக்கு சுமை

பயன்படாத வரை 'பணம்'
பெட்டிக்கு சுமை

பிறக்காத வரை 'குழந்தை'
தாய்க்கு சுமை

விரட்டியடிக்காத வரை 'வறுமை'
வாழ்க்கைக்கு சுமை

தன்னம்பிக்கை இல்லாத வரை 'சோகம்'
சாதனைக்கு சுமை

துணிவு கொள், வாழ்க்கை இனிதாகும்

## வெற்றி

முள்ளுக்கு பயந்தால் ரோஜாவை
பறிக்க முடியாது

இரவுக்கு பயந்தால் நிலவை
ரசிக்க முடியாது

படிப்பதற்கு பயந்தால்
பட்டம் கிடைக்காது

அதுபோல் தோல்விக்கு பயந்தால்
வெற்றி கிடைக்காது

எனவே வெற்றி என்பது எளிதல்ல
தோல்வி என்பது முடிவல்ல

**- ர. மோனிகா**
இளங்கலை இயற்பியல் 2ஆம் ஆண்டு
மன்னார்குடி

# உள்ளூரில் தொழில் செய்வதில் இவ்வளவு சிரமம் உள்ளதா?



உள்ளூரில் தொழில் செய்வதில் உள்ள சிரமங்களையும், அதை எப்படி கையாளுவது பற்றியும் மன்னார்குடியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் Bestech Computers நிறுவனத்தின் நிறுவனர் திரு. அமுதன் அவர்கள் நம்முடன் பகிர்ந்த கருத்துக்களை இங்கு பதிவு செய்கிறோம்.

எந்த மாதிரியான சிரமங்களை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள் அமுதன் என்றவுடன் நாம் சற்றும் எதிர்பாராத பல விடயங்களை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் வண்ணம் எளிமையாக பிரதிபலித்தார்.

வெளியில் இருந்து பார்ப்பவர்கள் நாங்கள் என்னமோ எந்த சவால்களும் எதிர் கொள்ளாதது போல் பேசுவார்கள், ஆனால் அதில் உள்ள சிரமங்களை களத்தினுள் வந்தால் மட்டுமே இங்கு உணர முடியும். அதை இங்கு பகிர்கிறேன்.

ஒரு காலத்தில் வேலை இல்லாமல் இருந்தது போய், இன்று வேலைக்கு ஆட்கள் கிடைப்பது சிரமமாக உள்ளது.

தொழில் என தொடங்கிவிட்டால், நம்முடைய சொந்த வேலை எதையும் பார்க்க முடியாது.

வேலை ஆட்கள் விடுப்பு என்றால் சொல்ல மாட்டார்கள். நாம் தான் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ள வேண்டும்

அதே போல் வாங்கும் சம்பளம் வெளிநாடுகளுடன் ஒப்பிட்டு சம்பளம் போதவில்லை என்றும் எண்ணுகிறார்கள். அதுவும் சரிவர வேலை செய்ய தெரியாதவர்கள் மற்றும் கற்று கொண்டு இருப்பவர்கள்.

சிறு தொழில் செய்பவர்கள், வேலை செய்பவர்களிடம் சொல்வது இது தான், வேலை நேரத்தில் தொலைபேசி, பகிரி, முகநூல் பயன்படுத்தாதீர்கள் என்று, இதை ஒரு முறை நாம் கூறினாலே அடுத்த நாளில் இருந்து வேலைக்கு வருவது இல்லை அவர்கள்.

நம்மிடம் வேலை செய்பவரிடம் வாடிக்கையாளர் இடத்திற்கு சென்று பழுது பார்த்துவிட்டு வர சொன்னால், அவரின் சொந்த தொலைபேசி இலக்கத்தை கொடுத்து இனி மேல் இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். நானே வந்து சரி செய்து கொடுக்கிறேன் என்பது. இங்கு பணி செய்யும் நிறுவனம் பற்றி யோசிப்பதை விட தங்களை பற்றி யோசிப்பதே அதிகம். அதனால் தான் அவர்கள் எதிர்காலத்தில் ஒரு நிறுவனம் தொடங்கினாலும் இதே

நிலைதான் ஏற்படுகிறது.

நிறுவனம் நன்றாக செயல்பட்டால், அதில் வேலை செய்பவர்களும் பலனடைவார்கள் என்ற அடிப்படை தெளிவு கூட இல்லாமல் இருக்கிறார்கள் இங்கு.

நாம் அலுவலகத்தில் இருக்கும் வரை மிகவும் ஆர்வமுடன் வேலை பார்ப்பார்கள். நாம் வீட்டுக்கோ அல்லது சொந்த வேலையாக வங்கிக்கோ போனோம் என்றால் அலுவலகத்தில் வேலை நடக்காது. அங்கு அரட்டை தான் நடைபெறும்.

வேலை நடைபெறும் நேரத்தில் அடிக்கடி வெளியில் செல்ல அனுமதி கேட்டுக் கொண்டே இருப்பார்கள். இவர்களை வைத்து இந்த வேலை செய்ய சொல்லலாம் என்று வைத்து இருப்போம். ஆனால் இவர்கள் வேறு வேலையை முன்கூட்டியே திட்டமிட்டு வைத்து விடுவார்கள்.

நாம் அனுமதி கொடுக்க முடியாது என்று சொன்னால் அடுத்த நாள் முதல் வேலைக்கு வரமாட்டார்கள். நம் சூழ்நிலையை புரிந்து கொண்டு சிறப்பாக வேலை செய்பவர்கள் சிலரே உள்ளனர்.

வாடிக்கையாளர்களுக்கு எப்பொழுதும் பொருள்களின் விலை மிக குறைவாக இருக்க வேண்டும். தரம் நிறைவாக இருக்க வேண்டும். ஆனால் நாங்களும் குறைந்த விலைக்கு தரமான பொருள்களை கொடுக்க வேண்டும் என்று தான் எண்ணுகிறோம். ஆனால் அதில் நடைமுறை சிக்கல்கள் நிறைய உள்ளது.

உள்ளூர் வாடிக்கையாளர்கள் இல்லாமல் நாங்கள் யாரும் இங்கு எந்த வியாபாரமும் செய்ய முடியாது, இதுதான் கள நிலவரம்.

போட்டி போட்டுக் கொண்டு வியாபாரம் செய்கிறோம். இதனால் லாபத்தினை விட நட்டத்தில் சிலர் விற்பனை செய்யும் போது நியாயமாக தொழில் செய்பவர்கள் கூட இதில் பாதிக்கப்படுகிறோம்.

அதே போல், ஒரு பொருள் சரிவர வேலை செய்யவில்லை என்று கொடுக்கும் வாடிக்கையாளர். அதை சரி செய்த பிறகு வந்து எடுப்பதே கிடையாது. இதில் 100 வாடிக்கையாளரில் சுமார் 15 வாடிக்கையாளர்கள் மட்டுமே வந்து பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் திரும்பி பெறாதவர்களின் பொருள்களையும் நாம் நீண்ட நாட்கள் பாதுகாத்து வைக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் என்று வேண்டுமானாலும் வந்து கேட்க கூடும். சில வாடிக்கையாளர்கள், மது அருந்தி விட்டு நிறுவனத்திற்கு வந்து தவறாக பேசுவது ஏற்புடையதாக இருக்காது. ஆனாலும் அவர்களிடம் நாம் பொறுமையாக தான் பதில் தர வேண்டும், வேறு வழி இல்லை தொழில் செய்பவர்களுக்கு.

அதே போல் வேலை தேடி வருபவர்கள் ஆரம்பத்தில் பெரும்பாலும் ஒன்றுமே தெரியாமல் வருவார்கள். ஆனால் நம்மிடம் இருந்து கற்றபின் வேறு எங்காவது சென்றுவிடுவார்கள்.

நாம் மீண்டும் முதலில் இருந்து வேறு ஆளை எடுத்து சொல்லி தர வேண்டும். இதுவும் ஒரு வகையில் கல்வி நிறுவனம் போல் தான்.

சொல்ல போனால் அவர்கள் சாதாரணமாகவே முதுகலை அறிவியல், வணிகம் என படித்து இருப்பார்கள். ஒரு முகவரியை எழுத சொன்னால் அதில் அவ்வளவு தவறு. இவர்கள் வேலைக்கு வருவதற்கு முன்பு கேட்கும் முதல் கேள்வி எவ்வளவு சம்பளம். நாம் 5000 என்றால் ஒரு 8000 தர முடியுமா என்று கேட்பது.

பலர் அவர்களுடைய வேலை என்ன என்பது தெரியாமலே உள்ளனர். ஒரு அடிப்படை அறிவு என்பதை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இருப்பது இல்லை.

அதே போல் உள்ளூரில் வேலைப் பார்த்தால் ஏதோ தன்மானத்திற்கு இழுக்கு வந்தது போல் நினைக்கின்றனர் பலர்.

மேற்சொன்ன அனைத்தும் கடந்து நம்முடன் பயணிக்கும் ஆட்கள் நமக்கு கிடைப்பார்கள். அப்படி கிடைத்து விட்டால் நாம் இன்னும் பல வெற்றிகளை பெறலாம். அதே நேரத்தில் அவர்கள் வளர்ச்சியையும் நாம் பார்த்து கொள்ள வேண்டும்.

பல கேள்விகளை கேட்டு, நாம் பதில் அளித்த பின் இறுதியாக வாடிக்கையாளர்கள் ஒரு பொருளை வாங்கி செல்வார்கள். மறுநாள் வந்து அதை மாற்றிக் கொடு என்று சண்டை போடுவார்கள். இயலாது என்று சொன்னால் வெளியில் சென்று உன் கடையை பற்றி தவறாக கருத்துக்களை பரப்புகிறேன் என்று சொல்லி நம்மை மிரட்டுவது போல் செயல்படுவார்கள்.

இதை போல் பெரிய கடைகளில் சென்று கேட்பது கிடையாது. சிறு நிறுவனத்தில் தான் இது போன்று தயங்காமல் கேட்பார்கள்.

கணினி பொருள்கள் விற்கும் நிறுவனத்திற்கு இப்படிப்பட்ட பிரச்சனை என்றால் துணிக்கடை வைத்து தொழில் செய்யும் இடத்தில் வேறுவிதமான பிரச்சனை வருகிறது.

உதாரணத்திற்கு குழந்தைகளுக்கென வாங்கும் உள்ளாடைகளை குழந்தைக்கு போட்டு பார்த்து விட்டு வந்து இது அளவு சரி இல்லை. இதை வைத்து கொண்டு வேறு மாற்றி கொடு என்பார்கள். இது போன்ற பொருட்கள் மாற்றுவது இல்லை என்று சொன்னால் ஏன் மாற்றுவது இல்லை? ஏன் என் பிள்ளைக்கு அப்படி என்ன வியாதியா இருக்கு என்று வாதாடி மற்ற வாடிக்கையாளர்களும் முகம் சுளிக்கும் அளவிற்கு நடந்து கொள்வது.

இப்படி சொல்லி கொண்டே போகலாம் என்றார் அமுதன். நிறுவனத்தை தொடங்கும் போது எந்த மனநிலையில் இருந்தீர்கள்? என்ற கேள்வியை முன் வைத்தோம்.

நான் ஆரம்பிக்கும் போது இரட்டை மன நிலை தான். இங்கு தொழில் செய்து பிழைக்க முடியுமா? அல்லது வெளிநாடு தான் போக வேண்டுமா? என்று இருந்தது. ஆனால் தொடர் உழைப்பிற்கும், முயற்சிக்கும் பலனாக இன்னும் சில தொழில்களில் ஈடுபட

முடிந்தது. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பொருள்கள் விற்பனை நிலையம், அதற்கெடுத்து நான்கு சக்கர வாகனங்களை பழுது நீக்கும் நிலையம் என மன்னார்குடி சந்தையில் நிலை நிறுத்தினேன்.

இடைமறித்து, எதிர்பார்த்ததை விட பலமடங்கு கருத்துக்களை பதிவு செய்து உள்ளீர்கள். இதனை எந்த வகையில் கையாண்டால் முதலாளிகள், தொழிலாளிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் என அனைவரும் பயனடையலாம் என்றோம்?

நாம் சென்னை போன்ற மாநகரங்களின் சந்தையை இங்கு மன்னார்குடியில் எதிர்பார்க்கிறோம். ஆனால் அந்த நிலையை எட்ட வேண்டுமானால் எங்களை போன்றவர்கள் வளர்ச்சி பாதையை நோக்கி செல்ல தேவையான வழி முறைகளை கையாள வேண்டும். ஏனென்றால் நாங்களும் அப்படிப்பட்ட சந்தையை மன்னார்குடியில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பயணிக்கிறோம். சிறிய சந்தைதான், ஆனாலும் அதில் சிறப்பாக செயல்பட முயற்சி செய்கிறோம் என்னை போன்று உள்ளூரில் தொழில் செய்பவர்கள்.

10 ஆண்டுகளுக்கு முன் ரூ.15,000/- முதலீட்டில் தொடங்கினேன். அன்று தந்தைக்கு கூட என் மீது நம்பிக்கை இல்லை 3 மாதங்களுக்குள் தொழிலை விட்டுவிட்டு வந்து விடுவேன் என்றே என் சகோதரியிடம் கூறினார்.

ஆனால் என்னுடைய மைத்துனர் திரு.J.ராஜ்மோகன் அதெல்லாம் அவனால் முடியும் என நம்பிக்கை வைத்து அவனிடம் பொறுப்பை கொடுங்கள் என்றார் என் தந்தையிடம்.

இந்த இடைப்பட்ட காலத்தில் நான் என்னுடைய நிறுவனம் மூலம் சுமார் ஒரு லட்சம் வாடிக்கையாளர்களுக்கு பணி செய்துள்ளேன்.

இங்கு மாற்றங்கள் கண் இமைக்கும் நேரத்தில் ஏதும் திரைப்படங்களில் நடப்பது போல் நடக்காது அதை நாம் அனைவரும் உணர வேண்டும்.


நீங்கள் கேட்ட கேள்விக்கு வருவோம்.

சிறப்பாக செயல்பட நாம் பின்பற்ற வேண்டியது தொடர்ந்து கற்பது கால தேவைகளுக்கு ஏற்ப நம்மை நாம் மேம்படுத்தி கொள்வது, பொறுமை, நேர கட்டுப்பாடு போன்றவைகளை கடைபிடித்தால் நிச்சயம் சிறப்பாக தொழில் செய்யலாம் உள்ளூரிலேயே.


அதே போல் வெளிநாடு வெளிநாடு என்று வேலை தேடுபவர்கள் சொல்லி கொண்டே உள்ளார்கள், அவர்களுக்கு தெரிய வேண்டியது வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு நம் நாடும் ஒரு வெளிநாடு தான் என்று சொல்லி சிரிக்க தொடங்கினார் அமுதன்.

நம்மூரில் தொழில் தொடங்க எண்ணுபவர்களுக்கு அமுதனின் அனுபவங்கள் ஒரு தெளிவை ஏற்படுத்தும் என்று சொல்லி விடைபெற்றோம்.



ஓவியம்
R. சௌமியா
எட்டாம் வகுப்பு
மார்டன் நடுநிலை பள்ளி
மன்னார்குடி



ஓவியம்
N. பிரியா
எட்டாம் வகுப்பு
மார்டன் நடுநிலை பள்ளி
மன்னார்குடி

# நம்மூர் பள்ளி

மன்னார்குடி என்றாலே அனைவரின் ஞாபகத்திற்கும் வருவது பாமணி ஆறு, மழைக்காலங்களில் சொல்லவே வேண்டாம், அவ்வளவு அழகு அந்த நீரோட்டத்தை பார்ப்பதற்கு.

அப்படிப்பட்ட அழகான ஆற்றங்கரை ஓரத்தில் ஜென்பகவிலாஸ் பள்ளி 1928 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

பின்னர் 1961ல் 6ஆம் வகுப்பும், 1962ல் 7ஆம் வகுப்பும், 1963ல் 8ஆம் வகுப்பும் துவக்கப்பட்டு நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

ஜென்பகவிலாஸ் என்று இருந்த பள்ளியின் பெயர் இப்பொழுது மணிமேகலை என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தலைமை ஆசிரியர், இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் என மொத்தம் 12 ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள் இந்த பள்ளியில்.

ஆரம்பத்தில் கீற்று கொட்டகையில் துவக்கப்பட்ட பள்ளியை எனது தந்தை தலைமை ஆசிரியராக பொறுப்பு ஏற்ற பிறகு ஓட்டு கட்டிடமாக மாற்றினார் மற்றும் என் தந்தை பணி ஓய்வு பெற்ற பின் நான் தலைமை ஆசிரியராக 2008ல் பொறுப்பு ஏற்று கொண்டேன் என்றார் இப்போது தலைமை ஆசிரியராக உள்ள ஜெய சீனிவாஸ் அவர்கள்.

2003-2004ஆம் ஆண்டு மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக தேர்வு செய்து சிறந்த பள்ளிக்கான கேடயமும் பெற்றுள்ளார்கள் மற்றும் பள்ளி நிர்வாகம் தற்போது மாடி கட்டிடமாக தரத்தை உயர்த்திட பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மணிமேகலை நடுநிலை பள்ளிக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவி செய்ய எண்ணும் உள்ளூர்வாசிகள் மற்றும் முன்னாள் மாணாக்கர்கள் அடுத்த பக்கத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியை தொடர்பு கொண்டு தங்களின் ஒத்துழைப்பை வழங்கலாம்.

கல்வி சுற்றுலா சென்ற போது எடுத்த புகைப்படம்





பள்ளியின் முகவரி
மணிமேகலை நடுநிலைப் பள்ளி
273, காந்தி ரோடு, (12 வது வார்டு, திருப்பாற்கடல் குளம் அருகில்)
மன்னார்குடி - 614001, திருவாரூர் மாவட்டம்
தொடர்பு இலக்கம்: +91 9443617724
மின்னஞ்சல் முகவரி: manimekalaimiddleschoolmannai@gmail.com

ச. நிதர்சனா, இரண்டாம் வகுப்பு
சௌடாம்பிகா குழுமப் பள்ளி
திருச்சி



போஸ், 10ஆம் வகுப்பு
தேசிய மேல்நிலைப் பள்ளி,
மன்னார்குடி



“ மருத்துவர் நோயாளியை கவனித்து கொள்வார்..
இயற்கை ஆரோக்கியமானவர்களை உருவாக்கும்.... ”

-இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்

# என் தாத்தா



பொன்னி கிழவி வளர்த்து எடுத்த புதல்வன் ....

பாமணி ஆற்றங்கரையில் புளியமரத்தின் இடையில்
கிழக்கே உதிக்கும் சூரியனும் நீ வம்பட்டி பிடித்து வரப்பு
வெட்டும் அழகை பார்த்துக்கொண்டே உதயமாகும் .....

பொட்டுக்கல்ல சக்கரையோட நீ பொன் ஏறு பூட்டுனா,
பொழுதுக்குள்ள மழை வருமே......

நீ சாணி மொழுகி கோட்டை கட்டிய விதை நெல் அனைத்தும் கோடி தலைமுறை சொத்து ஐயா ......

நீ நீராராம் குடிச்சி வண்டி ஓட்டி எருவு அள்ளி வீசையிலே தரிசு நிலம் தழைத்து வரும் ஐயா .....

நீ மதவடில மட மாத்துற வம்பட்டி களியில் உள்ள ஈரப்பதம் இன்னும் என் கைய விட்டு காயவில்லை...

நீ வாய்க்காங் கரையிலே வெத நெல்ல கரை சேர்க்கையிலே முளைத்து முளைத்து சிரிக்கும் ஒவ்வொரு நெல் மணியும்...

வண்டி மாடு பூட்டி நீ உழவு அடிக்கயிலே வடக்கி தெரு வரை மண் வாசம் வீசும்...

நீ மண்டி போட்டு நாத்து பறிக்கும் போது... நாத்து அதன் வேரில் இருந்து அறுபட்டாலும் பல உயிர்களுக்கு பசி தீர்க்க போகிறோம் என்ற கர்வத்தோடு கரை சேரும்...

நீ நாத்து முடி வீசும் வேகத்திலே எங்கள் பசியெல்லாம் தீர்ந்தது ஐயா .....

நடவு நடும் ஒவ்வொரு நாளும் உன் கை பட்ட பண்ணும் டீயும் நீக்கமற நிறைந்து இருக்கும் ....

அன்றைய கால பொழுதில் நீ முப்பது ரூபாய் சம்பளம், காந்தி கடை வடையும் கொடுத்து கீழ் குண்டு களை எடுக்க ஆள் பிடிப்பதே ஒரு கலை தான்...

நீ அரை கால் சட்டையும் ஊர்வசி பனியனும் போட்டு முண்டாசு கட்டி .... துணி துவைக்கும் கல் சாத்தி கோட்டவத்துல ஒரு கை பிரட்டி கதிர் அடிக்கையிலே.. அங்கேயே அரிசி ஆகும் ஒவ்வொரு நெல்லும் .....

கண்டு மொதல் கண்டு, நெல் மூட்ட ஏத்தி டயர் வண்டி தென்பர வாய்க்கா கடக்கயில சேத்துல மாட்டும் வண்டிய எழுப்பிவிட காண்டா விளக்கு வெளிச்சத்துல நீ போடும் சத்தம் என்னும் என் காத விட்டு போகலியே....

வைக்க தெர கட்ட வேப்பங் கம்பு ஒடிச்சி ஒரு ஆள் உட்கார்ந்து வைக்க நீ எடுத்து கொடுக்க... நீ குச்சி சுத்த இதற்காகவே தவம் கிடந்தது போல் முறுக்கி கொண்டு முன்னேறும் ஒவ்வொரு பிரியும் ....

நீ வைக்க போறு தளை கூட்டயிலே மாடு எல்லாம் வைச்ச கண்ணு வாங்காம பார்க்கும் ஐயா ......

சிங்கப்பூர் போகும் ஒவ்வொரு ஆளும் சேமிக்கும் மிகப்பெரிய சொத்து ரோசு அல்லது பச்சை கலரு படுதா, நீ மட்டும் அதில் விதிவிலக்கா என்ன....

வீட்டு வாசலிலே யாவரி ஆளு கூப்டாந்து நெல்லு மூட்ட அளக்கையிலே ரெண்டு ஆளும் ஒரு முட்டு முட்டி தூக்கி வீசுறத நீ எண்ணி கொண்டே வேடிக்கை பார்க்க,, அதை நான் எண்ணாமல் வேடிக்கை பார்ப்பேன் ....

நீ தேங்காய் எண்ண கொழப்பி தடவி பச்சை பெல்ட்டு போட்டு காவி துண்டு தோளில் போட்டு புறங்கையை பின்னால் கட்டி, கனைத்து நடக்கும் நடைக்கு எது ஈடு ஆகும்...

ராத்திரியில் கப்பி ரோட உரசி வருர உன் செருப்பு சத்தம், பேச்சு சத்தம் கேட்ட பின்பு தான் அந்தியில் நீ மேய்த்த மாடு அனைத்தும் நித்திரையில் அடங்க என்னும்....

நீ மூங்கி முள் எடுத்து, பால கிழிச்சி வேலி கட்டையிலயும், மட்ட வெட்டி கீத்து பின்னையிலயும் ஓணான் அனைத்தும் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கும்.....

நீ கொட்டாய் ஏறி கீத்து போட்டு ,வைக்க பரப்பி பிரி போட்டு கட்டி, வேப்பிலை சொறுவினால் மாடி வீடும் மயங்கி நிற்கும் .....

பொங்கல் அன்று கோடு வெட்டும் பொழுது...போன வருடம் கரி போட்டு மூடிய அதே இடத்தில் உன் வம்பட்டி விழும் நினைவாற்றல் கண்டு பல றை வியந்து போய் இருக்கிறேன்.....

மாட்டுப்பொங்கல் அன்று நீ தேய்த்து குளிக்கும் எண்ணையிலும், புலி மார்க் சீயக்காயிலையும் பாதி பங்கு கேட்கும் நம்ம பசு மாடு .....

நீ இடுப்பில் கட்டிய துண்டுடன், மா இலையில் நீர் தெளித்து கொண்டே பொங்கலோ பொங்கல் ... பொங்கலோ பொங்கல் .... என கத்தும் சத்தம் இனி எந்த சாமியிடம் பொங்கல் வைத்தாலும் என் தலைமுறைக்கு வாய்க்குமா......

அதே மாட்டு பொங்கல் அன்று உப்பு மிளகாய் போட்டு தென்கிழக்கில் கை நீட்டியபடி நீ தூக்கும் திருஷ்டி சட்டி சத்தம் போடும் உன் சங்கதியை .....

தேங்காய் வித்து லாபம் பார்த்ததயும் பார்த்து இருக்கேன் ... நீ பத்துக்கு ரெண்டு லாப கா கொடுத்ததையும் பார்த்து இருக்கேன் ....

ஊரு காமாண்டி கொளுத்தும் பொழுது நீ முடிஞ்சி கொண்டு வந்து கொடுக்கும் கடலை சூட்ட நான் இன்னம் உணர்வேன் ....

உள்ளிக்கோட்டையார் குடிச்சாலும் நாள் முழுக்க உழுத காசிலே தானே தவிர, நூறு கூலி கூட விக்கலையே என ஊரார் கூற சுக்கு நூறாக உடைந்தே போனேன் ......

இன்று சம்பாவும் எனக்கு இல்ல ,
குருவையும் எனக்கு இல்ல,
தாளடியும் எனக்கு இல்ல ... .

கோட்டவம் எனக்கு இல்ல... எலந்த மர நிழலும் எனக்கு இல்ல, மதவடியும் எனக்கு இல்ல... பாமணி ஆத்து சுக்காணும் எனக்கு இல்ல... ஏறி கரை கிட்டியும் எனக்கு இல்ல... வண்டி மாடும் எனக்கு இல்ல,, நீ தார் அடித்த பத்தாயம் எனக்கு இல்ல... காமாண்டியும் எனக்கு இல்ல.

மூங்கி குத்தும் எனக்கு இல்ல,,, மா மரம் எனக்கு இல்ல... சுண்ணாம்பு தடவிய கைத்து கட்டிலும் எனக்கு இல்ல... கட்டு பரணியும் எனக்கு இல்ல... பூசண மரம் எனக்கு இல்ல கிளுவ போத்தும் எனக்கு இல்ல...

வேம்படையார் கோயில் கரி ரசம் எனக்கு இல்ல ..... வேளாண் வீட்டு சாமி பொம்மையும் எனக்கு இல்ல... மாரியம்மன் கோயில் திருவிழாவும் எனக்கு இல்ல... கம்பு சொருவயும் எனக்கு இல்ல... அறுவடை கால பட்ட சோறும் எனக்கு இல்ல.. கப்பி கல்லு ரோடும் எனக்கு இல்ல ...

ஏன் சுடுகாடும் எனக்கு இல்ல .....

நான் வாழ்ந்தது உன்னுடன் என்னவோ பத்து வயது வரை தான் ..... ஆனால் நான் பழகியதோ பூமியில் பொன் விளைவிப்பது முதல் பொன் ஏறு பூட்டுவது வரை .....

உன் மரபு வழி வாழ்க்கையை வாழாமல் போனதன் விளைவு தானோ இன்று விவசாயிக்கும் பஞ்சம் ஐயா.....

நிம்மதிக்கும் நிலை இல்லை ஐயா.......

என் ஆகாச வீரனுக்கு அடுத்தவனே......

படைப்பு:
**திநேஷ் குமார் மாரியப்பன்**
மன்னை

# நகர்மன்ற, கிராம சபை உறுப்பினரின் அடிப்படை பணிகள்



செந்தில்குமரன்
மன்னார்குடி

இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்று பள்ளி பாட நூல்களில் மட்டும் படித்ததன் விளைவாக, நம் நகர்மன்ற, கிராம சபை உறுப்பினரின் அடிப்படை பணிகள் கூட என்னவென்று தெரியாமல் போய் விட்டது.

1950 ல் இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தான் இன்றும் இந்தியாவில் ஆட்சி நடக்கிறது.

நாடு முன்னேற வேண்டுமென்றால் கிராமம் தன்னிறைவு பெற வேண்டும். அப்படி இருக்கையில் கிராமந்தோறும் பஞ்சாயத்து வாயிலாக பல திட்டங்களை நிறைவேற்றி அதை மக்களிடம் கொண்டு சேர்த்திருக்க வேண்டும். அதற்காக தான் மக்களின் குறைகளை நேரிடையாக கேட்டறிந்து அக்கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட கிராம சபைக் கூட்டம் உருவாக்கப்பட்டது.

ஆனால் நம்மூரில் இது போன்ற கூட்டங்கள் நடக்கிறதா என்று கூட யாரும் கண்டு கொள்வதில்லை.

மாவட்ட வாரியாக எடுத்துக் கொண்டால், மூன்றாண்டுக்கு ஊராட்சி முறை செயல்படுத்தப்படுகிறது. 50000 மக்களை உள்ளடக்கியது மாவட்ட ஊராட்சியென்றும், 5000 மக்களை உள்ளடக்கியது ஊராட்சி ஒன்றியமென்றும், இதற்கு குறைவான எண்ணிக்கை கொண்டவற்றை கிராம ஊராட்சி என்றும் அழைக்கிறார்கள்.

மாநில தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தி மக்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவருடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். மாதந்தோறும் வார்டு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து கூட்டம் நடத்தி எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரம் இவருக்கு உள்ளது.

துணைத் தலைவரானவர், பஞ்சாயத்தில் உள்ள அனைத்து வார்டு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு, தலைவர் இல்லாத நேரத்தில் கூட்டத்தை வழிநடத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் துணைத்தலைவர் ஒத்துழைப்பு அளிக்காத பட்சத்தில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று பதவியில் இருந்து நீக்கலாம்.

கவுன்சிலர் என்பவர் மக்களால் நேரடியாக தேர்வு செய்யப்படுபவர். இவருடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். மக்கள் தங்கள் பகுதியில் நடக்கும் பிரச்சினைகள் குறித்து நேரிடையாக இவரை அணுகுவார்கள். இவர் இதனை எழுத்து மூலமாக பஞ்சாயத்து

தலைவரிடம் தெரிவிப்பார். பஞ்சாயத்து தலைவர் இப்பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்காவிடில், நேரடியாக மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்கலாம்.
பஞ்சாயத்து தலைவர், ஊராட்சி அளவில் செய்யும் அனைத்து பணிகளுக்கும் வார்டு உறுப்பினர்களின் ஒப்புதலின் பெயரில் தான் செய்ய முடியும்.

வார்டு கவுன்சிலர் அவர்களின் பணியை சிறப்பாக செய்ய வைப்பதற்கு முன் உங்களது வார்டு எண் மற்றும் வார்டு கவுன்சிலர்களை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

குப்பைத் தொட்டி முதல் அனைத்து பிரச்சினைகளையும் அவரிடம் தெரிவியுங்கள். நீங்கள் கட்டும் வரிப்பணத்திற்கான முழுப்பயனையும் அடையுங்கள்.

---

பள்ளி முடித்து வீடு வரும் என்
பார்வை முழுக்க அதன் மேலே

பார்த்து ரசிப்பேன் பரவசமாய்
பள்ளியில் இருப்பேன் அதன் நினைவாய்

கழுத்து மணியின் ஓசையுடன்
காலடிக் குளம்பின் சத்தத்துடன்

துள்ளி குதித்தே ஓடிவரும் என்
துருதுருவான ஆட்டுக்குட்டி

அடுத்த வீதிக்கு ஓடிடுவேன்
அதுவும் பின்னால் ஓடிவரும்
அன்பாய் தடவி அணைத்துக் கொள்வேன்

பள்ளி முடித்து வீடு வந்தேன்
கண்
பார்வையை சுழற்றி நோட்டமிட்டேன்
பட்டி முழுக்க தேடிவிட்டேன்

இடியாக
அந்த செய்தி காதில் விழ
அதிர்ந்து போனேன் நிலமாக

இருநூறு ரூபாய் பணத்திற்கு
அடுத்தவர் வீட்டிற்கு கொடுப்பதற்கு
ஆத்தா விலையை பேசிவிட்டார் என்
அழகு குட்டி ஆட்டிற்கு

என்
பட்டுக் குட்டியை காணவில்லை



மன்னை ராம்

# பணம் ஈட்டுவது மட்டும் வேலை இல்லை



பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

கடந்த ஆண்டு கல்லூரி படிப்பை முடித்தவன். தற்போது ஒரு தனியார் மருத்துவ நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன்.

நான் படித்த துறை வேறு, பணியாற்றும் துறை வேறு. சில நாட்கள் கழித்து யோசிக்கும் போது தான் தோன்றியது! ஏன் படிப்புக்கு சம்பந்தம் இல்லாத வேலையை செய்கிறோம், ஏன் அத்துறையை கற்றோம் என்று. இதற்கான விடை நமது வீட்டினுள்ளே தான் இருக்கிறது.

ஆம், பள்ளி சீருடை அணிந்த உடனே பெற்றோர் நம்மிடம் கூறுவது நீ நல்லா படிச்சி நல்ல வேலைக்கு போகணும்டா கண்ணு என்று.

நம் பெற்றோர்கள் பார்த்த சமுதாயத்தில் வியாபாரம் செய்தவர்கள் பெரும்பாலும் நட்டம் அடைந்தவர்களாகவே இருந்ததன் விளைவாக நம்மை அதை நோக்கி பயணிக்க வைக்க விரும்புவது இல்லை.

அதே நேரத்தில் நம்முடைய பலத்தையும் அவர்கள் குறைத்து பார்க்க செய்கிறார்கள் அவர்களுக்கே தெரியாமல் நம்மையும்.

இந்த இடத்திலேயே நமக்கு கொடுக்க வேண்டிய தன்னம்பிக்கையை அளிக்க தவறி விடுகிறார்கள் நம் பெற்றோர் அவர்கள் அறியாமையால்.

அதை நோக்கியே நாம் கல்வி பயணம் மேற்கொள்கிறோம். இறுதியில் ஏதோ ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து அந்நாட்டு வணிகத்தை உயர்த்துவோம். ஆனால் அங்கு நம் ஊர் பெருமை மட்டும் பேசி நம்மை பெருமைப்படுத்திக் கொள்வோம்.

ஏனோ எனக்கு தொழில் செய்வதில் தான் ஆர்வம். அதுவும் நம்மூரிலேயே.

நானும் சில திட்டங்களுடன் சில நண்பர்களிடம் பேசினேன் அவர்கள் நல்ல திட்டம் தான் செய்யலாம் என்று ஊக்கப்படுத்தினர். அதே ஊக்கத்துடன் பெற்றோரிடம் சென்றேன். அவர்கள் அதெல்லாம் சரியாக வராது போய் வேலைய பாருனு சொல்லி அனுப்பிட்டாங்க.

இது என் வீட்டில் நடப்பது மட்டுமில்லை, இதே நிலை தான் இன்று பல இளைஞர்களின் வீட்டிலும்.

இதில் என்ன வருத்தம் என்றால், வேலை வாய்ப்பை தேடி தான் அனைவரும் ஓடுகிறோம் அதை ஏன் உருவாக்க கூடாது? என்ற எண்ணம் நம்மில் பலருக்கு தோன்றுவது இல்லை.

கற்ற துறையில் தான் வேலைக்கு செல்ல வேண்டுமா?
ஏன் அத்துறையில் தொழில் செய்ய கூடாதா?

இதில் நிறைய பேர் சொந்த ஊரில் வேலை செய்வதையோ தொழில் செய்வதையோ அவமானமாக நினைப்பதும் உண்டு.

உள்ளூரில் தொழில் செய்கிறோம் என்றால் உள்ளூர் உற்பத்தி பெருகும். உற்பத்தி பெருகும் போது உள்ளூர் சந்தையும் பெருகுகிறது, ஊரும் வளர்ச்சி அடைகிறது. நாம் ஊரில் ஒருவர் தான் என்பதை மறத்தல் கூடாது.

ஆனால் இதில் சில நடைமுறை சிக்கலும் உண்டு.

பொருளாதார சிக்கலுடன் படித்து முடித்து தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்கள் கைகளில் இன்று இருப்பது கற்ற கல்வியும் அதற்கான சான்றிதழும் தான். ஆனால் தொழில் தொடங்க அது போதாதல்லவா.

முதலுக்கு எங்கே போவது?

அனுபவ அறிவு பெறுவது எப்படி?

அதற்காக பல ஆண்டுகள் வேலை செய்ய வேண்டும் என்று பொருள் இல்லை. அதே நேரத்தில், அதை எப்படி கையாளுவது என்றும் நாம் கற்க வேண்டும். முடிந்தால் பள்ளி அல்லது கல்லூரி நாட்களிலேயே பகுதி நேர வேலைக்கு செல்வதும் ஒரு வகை கல்வியே.

பணம் ஈட்டுவது மட்டுமில்லாமல், அதை எப்படி கையாள்வது என்பதும் அதே நேரத்தில் சந்தையில் உள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்ளவும் முடியும்.

வாடிக்கையாளர்களை எப்படி கையாளலாம் என்பது போன்றவற்றை நாம் படிப்பை முடிக்கும் முன்பே கற்கலாம். எதிர்காலத்தில் இது நமக்கு பக்க பலமாக இருக்க கூடும்.

இல்லையென்றால் நம் படிப்பை முடித்தவுடன், பயிற்சி போன்ற கட்டத்தை கடக்கவே சில ஆண்டுகள் கழிக்க வேண்டும். அதற்கு சிலரின் அறிமுகம் வேண்டும். அதை தான் நாம் பள்ளி, கல்லூரி நாட்களிலேயே பெறலாம் என்று கூறினேன்.

பொருளாதார பிரச்சனை இல்லாதவர்களுக்கு இது எளிதில் சாத்தியம்.

இதுவே ஒரு நடுத்தர குடும்பத்து இளைஞன் படித்ததே கல்வி கடனில் என்னும் நிலையில், அவனால் வீட்டிலும் பணமும் கேட்க முடியாது, வட்டிக்கு வாங்கி தொழில் தொடங்கும் போது வாங்கிய கடனுக்கும் வட்டி கட்ட வேண்டும் கல்வி கடனும் செலுத்த வேண்டும். தொழில் தொடங்கிய உடனேயே பெரிய லாபம் எதிர்பார்க்க முடியாது.

இதற்கு அஞ்சியே பல தொழிலதிபர்களை நாம் தவற விடுகிறோம்.

இதை எப்படி எதிர்கொள்வது?
நமது நட்பு வட்டத்திலோ அல்லது உறவினர்களிலோ யாரேனும் ஒருவர் தொழில் தொடங்க ஆர்வமாக இருப்பார்கள். ஆனால் அவர்களிடத்தில் செயல்படுத்துவதற்கான

வாய்ப்பு மிக குறைவாக இருக்கும். ஏனெனில் அவர்கள் வெளியூரிலோ அல்லது வெளிநாட்டிலோ வேலை செய்து கொண்டிருப்பர்.

அதை விட்டுவிட்டு தொழில் தொடங்குவதில் தயக்கம் இருக்கும். அவர்களும் நம்பிக்கையான செயல்பாட்டாளர்களை தான் தேடுவார்கள்.

நமக்கு முதலீட்டாளர்கள் தேவை அவர்களுக்கு செயல்பாட்டாளர்கள் தேவை. நாம் ஒன்று கூடினால் போதும் தொழில் தொடங்கலாம்.

அதே போல் இதற்கு திட்டமிடுதல் மிகவும் அவசியம். நாம் தொடங்க போகும் வணிகம் சார்ந்த உள்ளூர் சந்தையை நன்கு அறிந்து வைத்திருத்தல் அவசியம்.

ஆகையால், தொழில் செய்ய ஆர்வமுள்ள இளைஞர்கள் வேலை வாய்ப்பைத் தேடி ஓடாதீர்கள் வேலை வாய்ப்பை உருவாக்குங்கள்.


பெற்றோருக்கு ஒரு வேண்டுகோள்! பிள்ளைகளிடம் வெளிநாடு தான் வாழ்க்கை அங்கு தான் சம்பாதிக்க முடியும் என்ற எண்ணத்தை விதைக்காதீர்கள். முதலாளி ஆக வேண்டிய பிள்ளையை நீங்களே தொழிலாளி ஆக்கி விடாதீர்கள்.

தன்னம்பிக்கையோடு உழைப்போம், நாம் நாளைய தொழிலதிபர்களே என்பதை மனதில் நிறுத்தி.



**அர்சிதா**

UKG பாரதிதாசன் பள்ளி,
மன்னார்குடி




**ஜெ. சஹானா**

எட்டாம் வகுப்பு, மார்டன் நடுநிலை பள்ளி,
மன்னார்குடி

# ஒயர் கூடை பின்னும் முறை

## கோமதி ஜெயம்
மன்னார்குடி



முதலில் ஒயர் கூடையின் உயரத்திற்கேற்றவாறு ஒயரை அளவு எடுத்துக் கொள்ளவும்

அந்த அளவை வைத்து விரல் நுனியிலிருந்து முழங்கை வரை நான்கு அல்லது ஐந்து மடிப்பு வரை அளவு எடுத்து ஒயரை வெட்டவும்

உதாரணமாக உயரம் 20 cm என்றால் உயரத்திலிருந்து 4*20 ஐ கொண்டு ஒயரை நறுக்கவும்

பொதுவாக கூடைக்கு 18 முதல்  20 வரை பூ பின்னல் போடலாம். ஒரு ஒயரின் அளவை வைத்து மற்ற ஒயரை 18 வரை நறுக்கவும்.

நறுக்கிய 18 ஒயரை வைத்து கொள்ளவும்.

அகலம் 5, 7, 11 என நமக்கேற்றவாறு வைத்துக் கொள்ளலாம்.

அடுத்தது, ஒரு கம்பில் தேவையான அளவு ஒயரை சுற்றி வைத்துக் கொள்ள வேண்டும் (joint wire)

இப்போது நறுக்கிய ஒயருடன் கம்பில் சுற்றி வைத்துள்ள ஒயரை சற்று கூடுதலாக அதாவது நறுக்கிய ஒயரின் அளவோடு சற்று கூடுதலாக joint wire ஐ (x) வடிவில் வைத்து ஒரு முனையை மடித்து உள்ளே

சொருகி மறுமுனையை கீழே இழுத்தால் பூ வடிவில் வரும். அதனுடன் ஒவ்வொரு ஒயராக சேர்க்கவும் (18 வரை)

18 ஒயரையும் சேர்த்த பின் நமக்கு வாட்டமான மறுமுனையில் joint wire ஐ சேர்த்து பின்னிக் கொண்டே வரலாம்.

தொடர்ந்து பின்னி முடித்தவுடன் தேவையான உயரம் வந்த பின்பு மீதள்ள ஒயரை பின்னிய அந்த பூவில் கூடையின் உள்புறமாக சொருக வேண்டும். கூடையின் அடிப்பகுதி வரை சொருகவும்.

கைப்பிடி போட கூடையின் மேல் கைப்பிடி போல ஒயரை வைத்து அளவெடுத்து அந்த அளவோடு 5 மடங்கு கூடுதலாக வைத்து ஒயரை நறுக்கவும்.


உள்பக்க ஒயர் மூன்றாகவும் வெளிப்பக்க ஒயர் இரண்டாகவும் நறுக்கவும்.

உள் ஒயரை விட வெளிப்பக்க ஒயர் சற்று அளவு கூடுதலாக எடுத்துக் கொள்ளவும்.

நறுக்கிய ஒயரை கூடையின் உள்புறமாக விட்டு வெளிப்புறமாக சமமான அளவாக எடுக்கவும்.


சமமாக வைத்து உள் ஒயரை நன்கு பிடித்துக் கொண்டு வெளிப்பக்க ஒயரை மட்டும் மேலும் கீழுமாக விட்டு (சடைப்பின்னல்) பின்னவும்.


பின்னி முடித்து மறுப்பக்கம் முடித்து விடவும் முடித்து விட்ட மீத ஒயரை பூவில் உள்புறம் சொருகவும்.



















12

13

14

15

16

17

18

19

20

21

22

23

ஓடும் தொடர்வண்டியை ரசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு
அந்த தொடர்வண்டிக்கும் தண்டவாளத்துக்குமிடையில்
நசுங்கிக் கொண்டிருக்கும் எறும்புகளைப் பற்றி
எதுவும் தெரியாது!

கார்மேகங்களோடு வந்து பெய்கின்ற மழையை
ரசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு
ஒழுகும் கூரை வீடுகளைப் பற்றி
ஞாபகமேதும் வராது!

கண்ணாடிகளால் மூடப்பட்டு குளிருட்டப்பட்ட
சொகுசு மகிழுந்துகளில் விரையும் உங்களுக்கு
உங்கள் மகிழுந்தில் மோதிக் காயம்பட்டு
பாதையில் வீழந்த வண்ணத்துப்பூச்சியைப் பற்றிய
தகவல் தெரியாது!

கிளியின் அலகு கவ்வும் சீட்டுக்களைக் கவனிக்கும்
உங்களால்
அதன் வெட்டப்பட்ட சிறகுகளிலிருக்கும்
பரந்து விரிந்த வானத்தை
அடையாளம் காண முடியாது!

பருவத்தின் வாசலில்
மார்புகளின் பரிணாமத்தை அளவெடுக்கும் உங்களால்
சப்பும் குழந்தைக்கு பாலில்லையென அழும்
மார்புகளின் கனத்தை உணர முடியாது!

இப்படி நம் கண்ணெதிரிலும்
நமக்குத் தெரியாமலேயே நம்மாலும்.
நம்மால் உணரப்படாததும்
நடந்து கொண்டேயிருக்கின்றன
வலி மிகுந்த நிகழ்வுகள்



விக்னேசு, மன்னை

# அணு உலை ஏன் ஆபத்து ?



கதிரியக்கம் என்பது இயற்கையிலேயே சில தனிமங்களுக்கு உண்டு. போலோனியம், யுரேனியம், ரேடியம் போன்ற தனிமங்கள் இயற்கையிலே கதிர் வீச்சு தன்மை உடையது. அதனுடைய கதிர் வீச்சு அளவு கியூரி என்று அழைக்கப்படுகிறது.

கியூரி அளவு அதிகமாகும் போது அதன் கதிர் வீச்சு திறன் அதிகமாகும். கதிர் வீச்சு வெளிப்படும் தன்மையின் அளவு ரான்ஜன் per மணி (Roentgen/hour). சராசரியாக நம் உடல் .25 மில்லி ராஞ்சன் / மணி யை தான் தாங்கி கொள்ள முடியும். அதற்கு மேல் நம் உடல் பெறும் போது விளைவுகள் பாதிக்கும். அந்த அளவு அதாவது நம் உடலில் சேரும் கதிரியக்க அளவு (dosage) rem என்று சொல்லப்படுகிறது.

இது 300 தல் 400 rem வரை உடலில் சேர்ந்தால் 60ல் 50 பேர் மரணம் நிச்சயம். Lead, ஸ்டீல் போன்ற உலோகங்களை கொண்டு shielding அமைத்து நாம் கதிர் இயக்க பரவலை பெரும் அளவு தடுக்க முடியும். ஆனால் ஒரு விபத்தில் போது அந்த shielding பாதிக்கப்படும் போது விளைவுகள் கடுமையாக இருக்கும். குறிப்பாக கூடங்குளம் போன்ற இடங்களில்.

மேற்கூறியது இயற்கை கதிரியக்க தனிமங்கள் பற்றி. அடுத்து செயற்கை முறையில் எப்படி கதிரியக்கம் ஏற்படுத்தலாம் என்பது பற்றி பார்க்கலாம். அணுக்கரு பிளவு மூலம் உருவாக்கலாம்.

இரண்டு கதிரியக்க தனிமங்களை ஒன்றோடு ஒன்று மோத செய்வதன் மூலம் (bombarding), அணுவில் உள்ள நியூட்ரான் மதிப்பை மாற்றி அணு நிறை எண் மாற்றப்படும் போதும் உருவாக்கலாம். ஆனால் ஒரு முறை கதிரியக்கம் தூண்டப்பட்டால் அது அவ்வளவு எளிதில் பழைய நிலைக்கு வராது x ray போல. இது காமா ray, எனவே அது தொடர்ந்து செயல்பட்டு கொண்டே இருக்கும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு தான் அதன் வீரியம் குறையும்.

இங்கே நான் சொல்ல வருவது, இயற்கையிலே கதிரியக்க தன்மை உள்ள uranium 238 தனிமத்தை மேலும் அணுக்கரு பிளவு என்ற செயற்கை முறையில் அதன் கதிர் இயக்க தன்மை மேலும் செறிவூட்டப்படுகிறது அது தான் uranium 235.

எனவே அதன் வீரியம் எவ்வளவு என்று எண்ணி பாருங்கள். அதற்கு தான் அனைவரும் குறுகிறார்கள். மேலும் நம் மண்ணில் குறிப்பாக கேரள கடற்கரையில் எண்ணற்ற முறையில் கிடைக்கும் தோரியத்தை செயற்கை முறையில் அணுக்கரு பிளவு முறையில் கதிர் இயக்கத்தை தூண்ட முடியும். ஆனால் மிக அதிக விலையில் ரஷ்யாவில் இருந்து யுரேனியம் ஏன் இறக்குமதி செய்யப்படுகிறது ?

இதற்கு ஒரே காரணம் தான். பிறகு அவர்கள் யாரிடம் தான் விற்க முடியும் மித மிஞ்சிய

யுரேனியத்தை. எனவே மிக மிக ஆபத்தான ஒரு விடயம் இங்கே நடைபெறுகிறது.

அவர்கள் சொல்லும் ஒரே காரணம் நம் தமிழக மின் பற்றாக்குறை சரி செய்யவே இது என்று. 5 வருடங்களுக்கு முன் நம் மின் பற்றாக்குறை அளவு 5000 மெகா வாட்ஸ்க்கு மேல். ஆனால் கூடங்குளம் உற்பத்தி எவ்வளவு? அதில் தமிழ் நாட்டின் பங்கு எவ்வளவு?

1000 மெகா வாட்ஸ் உற்பத்தி செய்யப்படும் போதே நம் பற்றாக்குறை எப்படி சரி ஆனது???

நாம் சிந்திக்க மட்டும் அல்ல இது போன்ற ஆபத்தான விடயங்களை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றியும் அதிக விழிப்புணர்வு பெற வேண்டும்.

## மன்னை செந்தில் பக்கிரிசாமி



இணையத்தில் நீங்கள் பார்த்து, மாதிரி பிடித்திருந்தால் அதை போலவே உங்களுக்கு வடிவமைத்து தருகிறார் மன்னார்குடியை சார்ந்த **ராஜேஸ்வரி சுரேஷ் குமார்**



அவரின் கை வண்ணத்தில் உருவான படைப்புகள் உங்கள் பார்வைக்கு





# குருதி நன்கொடையாளர்களை அழைக்க

### A (+)

| | | |
|---|---|---|
| வி. அஜித்குமார் | - | 9487755623 |
| விஜய் | - | 9940260446 |
| ஜவகர் | - | 9042566249 |
| ப. பரத்குமார் | - | 8903580541 |
| சி. ராம்குமார் | - | 7871892677 |
| ச. மனோஜ்குமார் | - | 9750248045 |
| தி. ஜீவானந்தம் | - | 7708757723 |
| V.J. மணி | - | 8148122343 |

### A1 (+)

| | | |
|---|---|---|
| வினோத் கண்ணன் | - | 9566831807 |

### A1 (-)

| | | |
|---|---|---|
| நிவாஸ்குமார் | - | 8344892698 |

### AB (+)

| | | |
|---|---|---|
| கார்த்தி | - | 9976398065 |

### AB (-)

| | | |
|---|---|---|
| ரெ. விக்னேசு | - | 9894458222 |

### A1 B (+)

| | | |
|---|---|---|
| இரா.செந்தில்குமரன் | - | 9600803143 |

### B (+)

| | | |
|---|---|---|
| இராசசேகரன் | - | 9994006294 |
| ஓம்பிரகாஷ் | - | 9940285824 |
| கமல் | - | 9043185927 |
| ராஜகுரு | - | 9487357138 |
| B. அருண் | - | 9786419509 |
| பிரசன்னா | - | 8681835643 |
| சி. ரஞ்சித் | - | 9047183130 |
| C. விக்னேஷ் | - | 7639416466 |
| செ. சீனிவாசன் | - | 9443617724 |
| தா. கார்த்திகேயன் | - | 9841654422 |
| பாலாஜீ | - | 8438396845 |
| சதிஷ்குமார் | - | 9842081502 |
| இலியாஷ் | - | 9629898910 |
| பிரவின் | - | 9629505387 |

### B (-)

| | | |
|---|---|---|
| ம. விஜய்சாய் | - | 8122370916 |
| பா. அருள்ஜோதி | - | 9600674259 |

### O (+)

| | | |
|---|---|---|
| S. ரகுமான் | - | 9791784117 |
| T. கலைவாணன் | - | 9585173239 |
| சச்சின் | - | 8675727924 |
| ச. இரஞ்சித்குமார் | - | 9894291643 |
| ஜெ. செல்வகுமார் | - | 8220712913 |
| இரமேசு | - | 7339023935 |
| R. அருண்குமார் | - | 9894543216 |
| B. கார்த்திகேயன் | - | 9500982972 |
| வசந்தன் | - | 9786828973 |
| வி. அமுதன் | - | 9865541142 |
| செந்தில் | - | 9790146778 |
| நிரஞ்சன் | - | 7418513541 |

மண்ணையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

# GATE தேர்வு ஒரு பார்வை



இரா. கோபிநாத்
மன்னார்குடி

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.
-வள்ளுவர்

கேட் (GATE):
கேட் தேர்வு இன்ஜினியரிங் / டெக்னாலஜி / ஆர்கிடெக்சர் மற்றும் அறிவியல் பட்டதாரி நிலை பாடங்களைப் போல பல்வேறு இளங்கலை பாடங்களில் தேர்வாளர்களின் விரிவான புரிதல் தன்மையாக மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பரிசோதனை தேர்வாகும். இந்த தேர்வு மிக முக்கியமான ஒன்று மற்றும் உங்கள் வாழ்க்கையை மாற்ற கூடிய திருப்புமுனையாக அமையும். நம் அறிவையும் எண்ணங்களையும் இத்தேர்வு மேம்படுத்துவதையும் சிந்தித்துப் பார்க்கவும் உதவுகிறது. இந்த தேர்வு நிறைய விஷயங்கள் மற்றும் கல்வி அறிவை பெற வைக்கிறது.

இத்தேர்வானது தேசிய ஒருங்கிணைப்பு வாரியத்தின் சார்பிலும், இந்திய நுழைவுத் தேர்விலும், ஏழு இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களும் (மும்பை, தில்லி, குவஹாத்தி, கான்பூர், கராக்பூர், சென்னை மற்றும் ரூர்கி) ஆகியவற்றின் மூலம், உயர் கல்வி, மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (MHRD), இந்திய அரசாலும் நடத்தப்படுகிறது.

கேட் தேர்வு 2016 ம் ஆண்டு வரை இந்தியாவில் மட்டுமே நடத்தப்பட்டது, கடந்த ஆண்டு கேட் 2017 தேர்வு பங்களாதேஷ், எத்தியோப்பியா, நேபாளம், சிங்கப்பூர், இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நடத்தபடுகிறது. இந்த தேசியமயமாக்கலின் தேர்வாளர்களை ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எஸ்.சி.களில் சேர்க்க அனுமதிக்கப்படுகின்றன.

<u>கேட் பாடங்கள்:</u>
கேட் பல பாடங்களில் (ஆவணங்கள்) நடத்தப்படும். கேட் தேர்வில் நடத்தப்படும் 23 துறையில் ஒரு தேர்வாளருக்கு ஒரு துறை மட்டும் அனுமதிக்கப்படுவர்.

<u>கேட் பயன்கள்:</u>
கேட் மதிப்பெண் மூலம் கணக்கிடப்படும் மத்திய கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி அதாவது (எம்.எச்.ஆர்.டி மற்றும் இதர அரசு நிறுவனங்களால் நிதியுதவி வழங்கப்படும் நிறுவனங்கள்) பிந்தைய பட்டதாரி திட்டங்களுக்கு (எ.கா. ME /எம்.டெக் / டைரக்ட் டி.டி.) இந்தியாவில் வேலைவாய்ப்புக்கான சில பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் இந்த மதிப்பெண் பயன்படுத்தப்படுகிறது. குழுவின்'அ' நிலைப் பதவிகளுக்கு நேரடி ஆட்சேர்ப்பு, அதாவது மூத்த அலுவலர் (SFO Tele), மூத்த ஆராய்ச்சி அதிகாரி (SRO) (Crypto) மற்றும் SRO (S & T) ஆகியவை கேபினட் செயலகத்தில் இப்போது கேட் மதிப்பெண்கள் அடிப்படையில் செய்யப்படுகின்றன. மதிப்பெண் மூன்று ஆண்டுகள் வரை மதிப்பிடப்படும். மேலும் (ஏஐஆர்) தரப்படுத்தப்பட்டது.

‘‘கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்மணம்
பாரரங்கும் வீசும் தமிழ்நாடு.’’

- பாரதியார்

<u>நிதி உதவி மற்றும் பெல்லோஷிப்ஸ்</u> (Financial Assistance AND Fellowship) :

கேட் கல்வி மட்டுமல்ல நிதி உதவியாளர்களுக்கும் பலவற்றில் உதவுகிறது.

எம்.எச்.ஆர்.டி(MHRD) அல்லது மற்ற அரசு நிறுவனங்களால் ஆதரிக்கப்படும் நிறுவனங்களில் அறிவியல் சம்பந்தப்பட்ட அறிவியல் கிளையங்களில் மாஸ்டர் திட்டங்கள் மற்றும் நேரடி பொறியியல் துறைகளில்  மற்றும் நேரடி முனைவர் பட்டங்கள் ஆகியவற்றின் போது நிதி உதவி பெற மதிப்பெண் அவசியம்.

MHRD இன் உத்தரவின் படி, MHRD உதவித் தொகை / உதவித் தொகையுடன் பிந்தைய பட்டதாரி (Master மற்றும் Doctorate) சேர்க்கைக்கு பின்வரும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.  சர்வதேச மாணவர் சேர்க்கை, இதே போல் ஒப்புதல் நிறுவனங்களின் அறிவிப்பின் படி கல்வி ஊக்கதொகை / அசிஸ்டண்ட்ஷிப் (அனைத்தும் அல்லது வரம்புக்குட்பட்டது) வழங்கப்படலாம்.

பல அரசு நிறுவனங்களால் வழங்கப்பட்ட பல  ஃபெல்லோஷிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை கேட் தகுதியும் கொண்டுள்ளது.

நிதி உதவி பெறும் (புலமைப்பரிசில்) சர்வதேச மாணவர் சேர்க்கை, இதேபோல் ஒப்புதல் நிறுவனங்களின் அறிவிப்பின் படி ஸ்காலர்ஷிப் / அசிஸ்டண்ட்ஷிப் (அனைத்தும் அல்லது வரம்புக்குட்பட்டது) வழங்கப்படலாம்.

பல அரசு நிறுவனங்களால் வழங்கப்பட்ட பல ஃபெல்லோஷிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை கேட் தகுதியும் கொண்டுள்ளது. விண்ணப்ப படிவங்கள் முழுமையான விவரங்களை பெற மற்றும் MHRD உதவித்தொகை / உதவித்தொகை பெறுதல் நிறுவனம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து முழுமையான விவரங்களை பெற பரிந்துரைக்கப்படுகிறது.

<u>தேர்வாளர்களை தேர்ந்தேடுக்கும் முறை</u> (SELECTION OF CANDIDATE) :

பிந்தைய பட்டதாரித் திட்டங்களுக்கான தேர்வு / போட்டி மூலம் தேர்வாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், GATE இல் செயல்திறன் குறைந்தபட்சம் 70% எடையும், மீதள்ள 30% வெற்றியும் தேர்வாளர்கள் செயல்திறன் தேர்வு / போட்டி மற்றும் / அல்லது கல்வி பதிவு, MHRD வழிமுறைகளின் படி தேர்ந்தெடுக்கபடுகின்றன.

ஆனாலும் சோதனை / நேர்காணலில் குறைந்த பட்ச மதிப்பெண்களை பரிந்துரைக்க முடியும். MHRD உதவித்தொகை / உதவித்தொகை இல்லாமல் சேர்க்கைக்கு கூட சில கல்லூரி / நிறுவனங்கள் GATE தகுதிகளை குறிப்பிடபடுகின்றன.

வேலை வாய்ப்பு:
பொது துறைகளில் பெரும்பகுதி கேட் மதிபெண்களை கொண்டு 60% முதல் 70% வரை வாய்ப்பை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கிறது, மீதமுள்ள 40% முதல் 30% நபர்கள் நேர்காணல் அல்லது குழு கலந்துரையாடல் அல்லது நடத்தை தேர்வுகளை நடத்துகிறது.

பல பொதுத் துறை நிறுவனங்கள், கடந்த காலத்தில், தேர்வாளர்களை திரையிடுவதற்கு கேட் மதிப்பெண்கள் பயன்படுத்தின. அத்தகைய சில நிறுவனங்கள்: இந்திய ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், தேசிய தெர்மல் பவர் கார்ப்பரேஷன், பாரத் ஹெவி எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பவர் கிரிட் கார்ப்பரேஷன் போன்றவை.

கேட் அடிப்படை அம்சங்கள்:
அனைத்து 23 துறை தேர்வுகளும் (இணையத்தில் கணினி சார்ந்தே தேர்வு (CBT) நடத்தப்படும். ஒரு தேர்வாளர் கேட் தேர்வின் எந்த ஒரு தேர்வு மட்டுமே எழுதலாம். இணைய வழி பரிசோதனைப் பத்திரிகை, சில வினவல்களுக்கு விழிப்புணர்வு விசைப் பலகையைப் பயன்படுத்தி தேர்வாளரால் எழுத வேண்டும். பல கேள்விகள் multi choice வகையில் இருக்கும். ஸ்கிரீன் கால்குலேட்டரில் ஒரு மெய்நிகர் மட்டுமே பரிசோதனையில் பயன்படுத்தப்பட வேண்டும். தேர்வாளர்களுக்கு GATE வழங்கப்படும் ஒரே மெய்நிகர் கணிப்பான் பயன்படுத்த வேண்டும்.

## புல்லின் மனக்குரல்

வயல்வெளியில் படர்ந்திருந்தேன்
என்னை தேவையற்ற
களை என்றீர்...

என்னை ஓர் மானிடர் படம் பிடித்தார்
அந்த  புகைப்படத்தை பார்த்து
அருமையான கலை என்றீர்.....

-- மன்னை ரஞ்சித்



# வாழி காவிரி



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

வரலாற்று உரிமையும் காவிரி பிரச்சனையும்

காவிரி வரலாற்றை அங்கு குடிபெயர்ந்த முதல் மனித இனத்திலிருந்து தான் தொடங்க இயலும். அவ்வகையில் தமிழ் சமூகத்தை சேர்ந்த வேளிர்கள் (வேளாண் பெருமக்கள்) முதற்சித்தர் அகத்தியரின் வழிகாட்டுதலின் படி குடியேறி விவசாயம் செய்ததாகவும் அங்கு காவிரி நீரை முறையாக பாசனத்திற்கு பயன்படும் வகையில் வழித்தடங்களை அமைத்ததாகவும் வரலாறு சொல்கிறது.

இவ்வரலாற்று குறிப்புகள் அகத்தியர் காலத்திற்கு பின் வந்த தொல்காப்பியத்திலும், சிலப்பதிகாரத்திலும், அகநானூறிலும், பட்டினப்பாலையிலும் இருக்கின்றன என்று வரலாற்றாசிரியர்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அதே போல் இவ்விடம் சோழர்களுக்குட்பட்ட 'சோழர்கள் காடு' என்றே அழைக்கப்பட்டுள்ளது.

குடக்கு என்ற தமிழ் சொல் மருவி குடகு என்றாகியுள்ளது. குடக்கு என்றால் தமிழில் மேற்கு என்று பொருள். அதே போல் எருமை நாடு என்ற தமிழ் சொல்லே மகிஷவூர் என்றாகி மைசூர் என்று மருவியுள்ளது. எருமைக்கு வடமொழியில் மகிஷம் என்று பொருள். அதன் பிறகு 2ம் நூற்றாண்டில் முதல் அணையாக கட்டப்பட்ட கல்லணை மூலம் நம்முடைய நீர் மேலாண்மை மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை அறிய இயல்கிறது.

இவ்வரலாற்றின் மூலம் கர்நாடகாவில் உள்ளோர்களின் முன்னோர்களும் தமிழ் பேசி தமிழர் நிலத்தில் வாழ்ந்து தமிழ் அரசர்களின் கீழ் வாழ்ந்தவர்கள் தான் என்பதும் நமக்கு காவிரியில் உள்ள உரிமையும் புலனாகிறது.

18ம் நூற்றாண்டு வரை இங்கு நீர் மேலாண்மையிலும் பங்கீட்டிலும் எந்த பிரச்சனையும் எழவில்லை. 1807-ம் ஆண்டு தான் காவிரி நதி நீரைப் பங்கீட்டுக் கொள்வதில் சிக்கல் துவங்குகிறது.சென்னை மற்றும் மைசூர் மாகாணத்திற்கு இடையேயான பேச்சு வார்த்தையும் தொடங்குகிறது.

பலசுற்றுப் பேச்சுவார்த்தைக்குப் பின் 1892 பிப்ரவரி 18-ம் தேதி ஒரு ஒப்பந்தம் தயராகிறது. இதுதான் காவிரி நதிநீர் பங்கீட்டில் ஏற்படுத்தப்பட்ட முதல் ஒப்பந்தம். பிறகு 1906ல் மைசூர் மாகாணம் கிருஷ்ண ராஜ சாகர் அணை கட்டும் திட்டத்தை முன்மொழிந்தது, இதனால் வேறு வழியின்றி நம் இருப்பை தக்கவைக்க மேட்டூர் அணை திட்டத்தை சென்னை மாகாணம் முன்மொழிந்தது.

1906லிருந்து சுமார் 15 வருட தொடர் பேச்சுவார்த்தைக்கு பிறகு இறுதியாக 1921ல் கிருஷ்ண ராஜ சாகர் அணைக்கான வரைவு விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் இரு மாகாணங்களும் இறுதி செய்தன. 1924ல் நதிநீர் தொடர்பாக இரண்டு ஒப்பந்தம் இவ்விரு

மாகாணங்களுக்கு இடையில் கையெழுத்தானது, இது காவிரி ஒப்பந்தம் என்றழைக்கபடுகிறது.

1. பங்கீடு ஒப்பந்தம்
மொத்த நீர் - 671 - ஆயிரம் மில்லியன் கன அடி (TMC)
சென்னை மாகாணத்திற்கு - 489 ஆ மி க
மைசூர் மாகாணத்திற்கு - 177 ஆ மி க
கேரள மாகாணத்திற்கு - 5 ஆ மி க என இறுதி செய்யப்பட்டு கையெழுத்தாகியது.

2. மைசூர் அரசு காவிரியிலோ, அதன் கிளை ஆறுகளிலோ அணை கட்டுவதெனில் சென்னை மாகாணத்திடம் ஒப்புதல் பெற வேண்டும். சென்னை மாகாண அரசிற்கு காவிரியில் அனுபவ பாத்தியாய உரிமை உண்டு என்றும் இவ்வொப்பந்தத்தில் அதிகார பூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தத்தின்படி நடக்காத கர்நாடக அரசு நீரையும் ஒப்பந்த படி தராமல் கபினி, சொர்ணவதி, ஹேமாவதி போன்ற இடங்களில் அணைகளையும் இடைப்பட்ட காலத்தில் கட்டியுள்ளது. பிறகு 1986ல் தமிழகத்திலிருந்து விவசாயிகள் (மன்னார்குடி இரங்கநாதன் அவர்கள்) உச்ச நீதி மன்றத்திற்கு இப்பிரச்சனையை கொண்டு செல்கின்றனர்.

இதன் உச்சமாக 1990ல் அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம் 1991ல் இடைக்கால ஆணை வெளியிட்டு, அந்த மத்திய அரசு உத்தரவை அரசிதழில் வெளியிட்டது. அதனை எதிர்த்து கர்நாடகாவில் நடந்த வன்முறையில் சுமார் 100 தமிழர்கள் கொல்லப்பட்டனர், பல்லாயிரம் பேர் தாக்கபட்டு சொத்துக்கள் சூறையாக்கப்பட்டது.

பின் பல தொடர் வழக்கு, போராட்டத்திற்கு பிறகு 1998ல் பிரதமர் தலைமையில் காவிரி ஆணையம் அமைக்கப்படுகிறது. இவ்வாணையம் 2007ல் இறுதி தீர்ப்பை வெளியிட்டது. அதில்,

மொத்த நீர் - 740 ஆ மி க
தமிழ் நாட்டிற்கு - 419 ஆ மி க
கர்நாடகத்திற்கு - 270 ஆ மி க
கேரளத்திற்கு - 30 ஆ மி க
புதுவைக்கு - 7 ஆ மி க

கடலில் கலப்பதற்கு - 14 ஆ மி க என ஒதுக்கீடு செய்து தீர்ப்பளித்தது. இதில் கவனிக்க வேண்டிய ஒன்று , தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட 419 ஆ மி க வில் 192 ஆ மி க மட்டும் கர்நாடகா தரும் மீதள்ள 227 ஆ மி க தமிழகத்தில் உள்ள கிளை நதிகளான பவானி, நொய்யல், அமராவதி, பாலாறு போன்றவற்றிலிருந்து பெற்று கொள்ள வேண்டும். இந்த 192 ஆ மி க என்பது நமக்கு போதுமானது இல்லாத பட்சத்திலும் தமிழகம் அதை பெருந்தன்மையுடன் ஏற்று கொள்ள தயாராக இருந்தது ஆனால் கர்நாடகம் இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்ததால் தமிழகம் மேல்முறையீடு செய்ய வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டது. அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் பொழுதே 2013ல் மத்திய அரசு இத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது.

இவ்வழக்கு 2016 செப்டம்பரில் கர்நாடகாவை தினசரி நீர் திறந்துவிட வலியுறுத்தி தீர்ப்பை உறுதி செய்தது. இதையும் கர்நாடகா மதிக்காமல் அங்கு வன்றையை கட்டவிழ்த்து தமிழர்களை தாக்கியது. மத்திய அரசும் காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து தீர்ப்பை செயல்படுத்த ஆவண செய்யாமல், மேலாண்மை வாரியம் அமைக்க உச்சநீதிமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தை வஞ்சித்தது.

தீர்வுகள்: -
உடனடியாக தமிழக அரசு முன்னெடுக்க வேண்டியவைகள்

1. இப்பிரச்னையில் மத்திய அரசை மொத்தமாக நம்புவதை விடுத்து கர்நாடகாவுடன் இணக்கமான பேச்சு வார்த்தையில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் கர்நாடக அரசும் அம்மாநில மக்களுக்கு புரிதலை ஏற்படுத்த முனையும்.

2. காவிரி ஆற்றில் நடக்கும் மணல் சுரண்டலை தடுக்க வேண்டும். காவிரி நீர் வரத்து குறைந்த காலங்களிலேயே இச்சுரண்டல் அதிகமாக ஆரம்பித்தது. இதில் கவனிக்க வேண்டியது இச்சுரண்டலுக்கு எதிராக போராடுபவர்களை ஒடுக்குவதும், கொலை செய்வதும் தமிழர்கள் தானே ஒழிய கன்னடர்கள் அல்ல.

3. ஆற்றில் கலக்கும் கழிவுகளையும், ரசாயனங்களையும் கட்டுப்படுத்த வேண்டும்

4. இங்குள்ள அனைத்து கட்சி, இயக்கம், மக்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து வலுவாக செயல் பட வேண்டும்.

5. நீர் வழிகள் மற்றும் ஏனைய நீர் நிலைகளை சீரமைக்க வேண்டும்.

நாம் செய்ய வேண்டியது

1. நாம் காவிரி நீர் பெறுதலை மட்டுமே நோக்கமாக கொண்டு செயல்பட வேண்டுமே ஒழிய, கர்நாடகாவை வெல்லவோ, அவர்களை தாக்கவோ, நம்டைய அரசியல் தேவைக்கோ போராட கூடாது. காவிரி நீர் பெறுதல் மட்டுமே இலக்கு. இணக்கத்துடன், அமைதியாக நம்முடைய முன்னெடுப்பை செய்ய வேண்டும்.

2. காவிரியும் நம் வாழ்வும் ஒன்றிணைந்தது என்ற புரிதலை ஏற்படுத்த வேண்டும். இறை நம்பிக்கை உள்ளோர் காவிரியை இறையாகவும், இயற்கை நம்பிக்கை உள்ளோர் காவிரியை இயற்கை அன்னையாகவும் வணங்க ஆரம்பிக்க வேண்டும்.

3. இதை மாநில அரசுகளுக்குள் உள்ள பிரச்சனையாகவும், டெல்டா விவசாயிகள் பிரச்சனையாகவும் பார்க்காமல் இது தமிழர் நிலத்தின் குருதி ஓட்டமாக பார்க்க வேண்டும்.

4. நம்முடைய மொழியை, வரலாற்றை, இயற்கையை பேணி காக்க பழக வேண்டும். அடுத்த தலைமுறையையும் அதுபோல் உருவாக்க வேண்டும்.


5. காவிரி நெடுக பயணம் மேற்கொள்வதை தொடங்க வேண்டும். குழந்தைகளுக்கும்

இவ்வரலாறை எடுத்துரைக்க வேண்டும் .


மனிதர்கள் மீதும் இயற்கையின் மீதும் பற்று கொண்ட சமூகமே உண்மையான மனித சமூகம்.

குழந்தைகளின் சிந்தனையில் உள்ள உலகம் இப்படிதான் இருக்கிறது,

இதை சிதைக்காமல் அவர்களிடம் கொடுப்பது நம் ஒவ்வொருடைய கடமை.




ஓவியம்:
R. நித்திலாஷா ஷாலனி
ஆறாம் வகுப்பு,
மார்டன் நடுநிலை பள்ளி, மன்னார்குடி



ஓவியம்: A. விந்தியா
ஆறாம் வகுப்பு,
மார்டன் நடுநிலை பள்ளி,
மன்னார்குடி

# மருத்துவர் பாரதிசெல்வனுடன் உரையாடல்




மன்னார்குடியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பாரதி இதய மருத்துவமனை மருத்துவர் பாரதிசெல்வன் ஐயாவிடம் சில கேள்விகளை முன் வைத்து அதன் பதிலை இங்கு பகிர்கிறோம்...

1.ஒருவர் மருத்துவமனையை நாடாமல் இருக்க எப்படிப்பட்ட வாழ்வியல் இருக்க வேண்டும்?

இன்று நடைமுறையில் உள்ள, நாம் வாழும் மாசுபட்ட, ஒழுங்கற்ற, இயற்கை கெடுக்கப்பட்ட புறச் சூழலில், இச்சூழலைச் சார்ந்துள்ள நமது வாழ்வில், நமது தனிப்பட்ட வாழ்வியல் நடைமுறைகளால், நாம் மருத்துவமனைக்கு செல்வதைத் தடுக்க முடியுமா என்பது ஐயத்திற்குரியதே.

இதே போன்ற வினாவுக்கு ஐயா நம்மாழ்வார் அவர்களின் விடை இதோ!
உடல் நாம் சொல்வதைக் கேட்க வேண்டுமானால், நான்கு விடயங்களில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும்.

ஒன்று... பசி வந்து சாப்பிட வேண்டும், இரண்டு... தாகம் வந்து தண்ணீர் அருந்த வேண்டும், மூன்று... சோர்வு வந்து ஓய்வு எடுக்க வேண்டும், நான்கு... தூக்கம் வந்து தூங்க வேண்டும்.

இந்த நான்கு விஷயங்களும் ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமான விஷயங்கள்.

'இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்
- என்கிறார் வள்ளுவர்.

அளவறிந்து அமைதியாய் சாப்பிட்டால் ஆரோக்கியம் நம் பக்கம் நிற்கும். இல்லாவிட்டால் வள்ளுவர் சொல்வதுபோல் நோய்தான் நம் பக்கம் நிற்கும். இன்றைய இளைய தலைமுறையினருக்குச் சாப்பிடக்கூட நேரம் இல்லை. அவசரம் அவசரமாக அள்ளி விழுங்கிவிட்டு ஓடுவது நிறைய வியாதிகள் வருவதற்குக் காரணமாகிவிடுகிறது. பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும். கெட்டுப்போய்விடக் கூடாது என்பதற்காக அதில் கலக்கும் ரசாயனங்கள் நம் வயிற்றுக்குள் சென்றும் அதே வீரியத்தோடுதான் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பசித்தால் மட்டுமே உணவு, அதுவும் இயற்கை உணவு; அதையும் கொஞ்சம் கொஞ்சமாக உமிழ்நீரோடு சேர்த்து ரசித்து மென்று சாப்பிட்டால் எப்படி வரும் வியாதி? எல்லாமே கலைதான்!

நோய் வந்த பிறகுதான் உடலைப் பற்றிய ஞாபகமே மக்களுக்கு வருகிறது; மருத்துவமனைகளைத் தேடிப் போய் பணத்தைக் கொட்டுகிறார்கள். ஆனால், நோய் வருவதற்கு முன் தங்களது உடலைக் காப்பதற்காக நேரம் செலவழிப்பது இல்லை.

2. பல நாடுகளில் கார்லிக்சு மற்றும் காம்பிளான் போன்ற பொருள்களுக்கு தடை உள்ளதே ஏன் இங்கு இல்லை?

கார்லிக்சு, காம்பிளான் போன்ற சத்துமாவுகள் என்ற விளம்பரத்தோடு, விற்பனை செய்யப்படும் பொருட்கள் தேவையற்ற மருந்துகள் (Non Essential Drugs) என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்ததால் மக்கள் நலனில் அக்கறை கொண்ட சில நாடுகளில், இப்பொருட்களின் விற்பனை தடை செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொருட்களை உற்பத்தி செய்யும் பெரு நிறுவனங்களின் நலனில் அக்கறை கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் இவற்றின் விற்பனை தடை செய்யப்படவில்லை. கார்லிக்சைவிட கேழ்வரகுக் கூழ் குறைந்த விலையில் கிடைக்கும் சிறந்த சத்துணவு என்பதே உண்மை.

3. சித்தா, ஆயுர்வேதம் போன்ற பிற மருத்துவ முறைகளை எந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்தலாம், அலோபதியை எந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்தலாம்?

அனைத்து நோய்களையும் முற்றிலும் குணப்படுத்தும் ஒற்றை மருத்துவ முறை என்பது இல்லை. சித்தா எப்படி தமிழ்நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறையோ, அதைப்போல இந்தியாவின் பிற பகுதிகளில் ஆயுர்வேதம் பாரம்பரிய மருத்துவ முறை, ஐரோப்பிய நாடுகளில் அல்லோபதி (ஆங்கில), ஓமியோபதி மருத்துவ முறைகள் பல ஆண்டுகளாக நடைறையில் உள்ளன. அரசு அந்தந்த மருத்துவ முறைகளைக் கையாளும் திறமையான, நேர்மையான, சமூக அக்கறையுள்ள மருத்துவர்களைக் கொண்ட ஆய்வுக்குழு அமைத்து, ஒவ்வொரு நோய்க்கும் சிறந்த தீர்வளிக்கும் மருத்துவ முறை எது என்பதைப் பற்றிய ஆய்வறிக்கை பெற்று அதை மக்களுக்கு அறிவித்து, அது முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

எனது அனுபவத்தில் புற்றுநோய், அறுவை சிகிச்சையால் அகற்றப்படவேண்டிய கட்டிகள், மாரடைப்பு, கிருமிகளால் ஏற்படும் நோய்கள், உடலிலிருந்து நீர்ச்சத்து இழப்பு ஏற்படுத்தும் வயிற்றுப்போக்கு, வாந்தி, திடீர் இரத்த இழப்பு போன்றவற்றிற்கு ஆங்கில மருத்துவமே சரியானது. இதேபோல் எந்தெந்த நோய்களுக்கு சித்த மருத்துவம் சிறந்த தீர்வினைத் தரும் என்பதை அத்துறை சார்ந்த மருத்துவர்கள் தான் சொல்ல முடியும்.

4. பெருவாரியான மருந்துகளில் பக்க விளைவுகள் ஏற்படுவதாக செய்திகள் வருகிறதே அதனை பற்றி...

எல்லா ஆங்கில மருந்துகளும் பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையே. இதன் அடிப்படையில் எந்த நோயாளிக்கு குறிப்பிட்ட மருந்தைப் பயன்படுத்தக் கூடாது என்பதை மருத்துவர் அறிந்திருக்க வேண்டும். பக்க விளைவுகளில் சில தாங்கக்கூடியவை.

சில உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை. சில பக்கவிளைவுகள் 100க்கு 10 பேரை, பாதிக்கக்கூடும்.

சில 1000ல் ஒருவரை சில 10000ல் ஒருவரைத்தான் பாதிக்கும். மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்து என்ன பக்க விளைவுகளை உண்டாக்கக் கூடும், அதை எப்படி கண்டறிவது, உடனே என்ன செய்ய வேண்டும் என்பதை நோயாளிக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒரு நோயாளிக்கு நோயால் பாதிப்பு ஏற்படலாம். ஆனால், மருத்துவர் கொடுக்கும் மருந்தினால் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பது ஆங்கில மருத்துவ அடிப்படை நூல் ஒன்றில் நான் படித்தது.

5. குடும்ப மருத்துவர் என்பது ஏற்புடையதா, இல்லை அந்தந்த சிறப்பு மருத்துவரை அணுகுவது ஏற்புடையதா?

குடும்ப மருத்துவர் முறை மிகச் சிறந்தது. ஏனென்றால் நோய்களைப் பற்றியும், மருத்துவ படிப்புகள் பற்றியும் குறைந்தபட்ச விழிப்புணர்வு படித்தவர்களிடம் கூட இல்லாத தற்போதைய நிலையில், எந்த நோய்க்கு யாரை அணுக வேண்டும் என்பது நோயாளிகளுக்கு தெரியவில்லை. பல மருத்துவர்களும் நோயாளிகளுக்கு சரியாக வழிகாட்டுவதில்லை. எனவே நம்பிக்கையான குடும்ப மருத்துவர் சாதாரண நோய்களுக்கு குறைந்த செலவில் சிகிச்சையளிப்பார்.

குறிப்பிட்ட நாட்களுக்குள் நோய் சரியாகவில்லை என்றால் அந்த நோய்க்கான சிறப்பு மருத்துவரைப் பார்க்க பரிந்துரைப்பார். நோயின் தன்மையைப் பொருத்து ஆரம்ப நிலையிலேயே கூட அதற்கான சரியான சிறப்பு மருத்துவருக்கு பரிந்துரைப்பார். தொடர்ந்து ஒரு குடும்ப மருத்துவரிடம் சிகிச்சை பெற்றால், அந்த நோயாளிக்கு உள்ள அடிப்படை நோய்கள், அவருக்கு எந்த மருந்து ஒத்துக்கொள்ளும், எது ஒத்துக்கொள்ளாது என்பதை குடும்ப மருத்துவர் அறிந்திருப்பார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொடர்ந்து தொடர்பில் இருப்பதால், நோயாளியின் உடல் நலத்தின் மீது குடும்ப மருத்துவருக்கு அதிகபட்ச பொறுப்புணர்வு இருக்கும். ஒருசில உயிர்காக்கும் அவசர சிகிச்சை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சிறப்பு மருத்துவரை நேரடியாக அணுகலாம்.

“ முயற்சி என்பது விதைபோல அதை விதைத்து கொண்டே இரு,
முளைத்தால் அது மரம் இல்லையேல் அது நம் மண்ணுக்கு உரம்.. ”

-இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்

## தேர்தல் ஆணையம் போல
# கல்வித் துறையும் தனித்த அதிகாரம்
## உள்ள அமைப்பாக உருவாக வேண்டும்


ஆசிரியர் ச.அன்பரசு

உடையையும், உணவையும் தேர்வு செய்யும் இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமை போல கல்வி முறையையும் தேர்ந்தெடுக்கும் உரிமையும் இன்று கேள்வி குறியாகி உள்ளது. ஆங்கிலேயர்களுக்கு நம் நாடு அடிமை இல்லை. ஆனால் அவர்களின் மொழிக்கும், உடைக்கும், உணவிற்கும், கல்வி முறைக்கும் நாம் அடிமை.

ஒற்றை வரியில் சொல்லப் போனால் மெக்காலே வகுத்த கல்வி முறை தான் நாம் இன்று பயிலும் கல்வி முறை. தாகூரும், காந்தியும் வகுத்த கல்வி முறையும் ராணுவப் பள்ளி நவோதயாப் பள்ளி, மத்தியப் பள்ளி, சர்வதேசப் பள்ளி, மாநிலக் கல்வி முறை, திறந்தவெளிப் பள்ளி என பலவகை கல்வி முறை பின்பற்றப்படும் தேசத்தில் பொது நுழைவுத் தேர்வு மட்டும் சாத்தியமாமாகவா போகிறது.

கல்வி என்பது மாநிலப் பட்டியலில் இருந்து சிறுக சிறுக மத்தியப் பட்டியலுக்கு சென்று கொண்டிருக்கிறது. இது நன்மையா, தீமையா என எனக்கு தெரியாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல் பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவனுக்கு வங்கியின் பணம் செலுத்தும் படிவத்தை சரியாக நிரப்ப தெரியவில்லை. காணாமல் போன மிதிவண்டி பற்றி யாரிடம் புகார் கொடுக்க வேண்டும் என தெரியவில்லை. ஏன்? கல்லூரியில் சேருவதற்கான விண்ணப்பத்தை கூட சரியாக நிரப்ப தெரியவில்லை இதுதான் இன்றைய கல்வி முறை.

அரசியல்வாதிகள் மற்ற துறைகளில் செயல்படுவது போல இன்றைய பொழுது நல்லா போனா போதும் என்ற எண்ணம் கல்வித் துறைக்கு உதவாது. அடுத்த பத்தாண்டுகளில், இருப்பது ஆண்டுகளில் என இலக்கு நிர்ணயித்து பயணிக்க வேண்டும். இஸ்ரோ போல, தேர்தல் ஆணையம் போல கல்வித் துறையும் தனித்த அதிகாரம் உள்ள அமைப்பாக அரசியல்வாதிகளின் கையிலிருந்து விடுபட வேண்டும்.

தமிழக கல்வி துறையில் 12 ஆண்டுகள் கழித்து இப்போது தான் பாடத்திட்ட மாற்றம் என்ற செய்தி வெளியாகி இருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் புதிய பாடத்திட்டம் மாறி இருக்க வேண்டும். காரணம் சமூகத்தில் பல மாற்றங்கள் பல துறைகளில் ஏற்பட்டு கொண்டு இருக்கிறது. நாம் கணிக்க முடியாத அளவில் வளர்ச்சிகள் நடைபெற்று வருகிறது அனைத்து துறைகளிலும்.

பரவாயில்லை, இப்போது வரும் தேர்வு முறை மாற்றம், தர வரிசை முறை ரத்து என்பன காதிற்கு தேன் தான்.

மாற்றங்கள் வருகின்றன அவை செயல்படுத்தப்படும் விதத்தில் தான் பல்வேறு விதமான கோளாறுகள்.

உதாரணத்திற்கு மேல்நிலை வகுப்புகளில் செய்முறை தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்த செய்முறை தேர்வுகள் தான் கல்லூரி படிப்பிற்கு அடித்தளம். ஆனால் நூறுக்கு நூறு மதிப்பெண் எடுக்கும் மாணவன் தொடங்கி 10 மதிப்பெண் மட்டும் வாங்கி தோல்வி அடையும் மாணவன் வரை செய்முறை தேர்வுக்கு வரவில்லை என்றாலும், வீட்டிற்கு சென்று அழைத்து வந்து கெஞ்சி தேர்வெழுத வைத்து செய்முறைத் தேர்வில் முழு மதிப்பெண் கொடுக்க வேண்டும் என்கிற நிலை தான் இப்போது உள்ளது.

இவ்வாறு மன்னார்குடியின் அடையாளமாய் திகழும் தேசிய மேல்நிலைப்பள்ளியின் இயற்பியல் ஆசிரியர் ச.அன்பரசு அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.




கணிதவியல் 3ம் ஆண்டு
Born Secours College for Women

“ பூமி நமது தாய்.
அந்த தாய்க்கு
என்னவெல்லாம் நேரிடுகிறதோ...

அதுவே அவளுடைய
பிள்ளைகளான நமக்கும்
நாளை நேரிடும்.

ஏனென்றால், பூமி மனிதனுக்கு
சொந்தமானது அல்ல.

மனிதன் தான்
பூமிக்கு சொந்தமானவன். ”

-இயற்கை வேளாண் விஞ்ஞானி
**நம்மாழ்வார்**

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

உங்களின் படைப்புகள் சிறுகதை கட்டுரை கவிதை ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322


---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு



ஓவியம்

பாரதி சுதாகரன்

மன்னார்குடி

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

# எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

+91 8220567322

http://maintharkal.mannai.in